வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 05
15.12.2024 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 349
பக்கங்கள் : 16




# உள்ளூராட்சி தேர்தல் ஏப்ரலில்! மாகாண சபை செப்ரெம்பரில்!!

## அநுர தலைமையிலான அரசு திட்டம்

கொழும்பு, டிசெம்பர் 15

**அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் செப்ரெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசு திட்மிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் அடுத்த வருடம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான திகதிகளை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் வேட்பு மனுக்களை இரத்து செய்து புதிய வேட்பு மனுக்களை கோரும் வகையில் உளளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் மாத தொடக்கத்தில் நடத்தவும், 7 ஆண்டுகளுக்கும் மேலாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது - என்றுள்ளது. (அ)

# புதிய சபாநாயகர் தெரிவு 17ஆம் திகதி நடைபெறும்!

கொழும்பு, டிசெ. 15

சபாநாயகர் பதவியிலிருந்து தாம் விலகுவதாக அசோக ரன்வெல நேற்று முன் தினம் அறிவித்த நிலையில் புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

புதிய சபாநாயகரை அடுத்த பாராளுமன்ற அமர்வின் முதல் நாளில் தெரிவு செய்யவேண்டும் என பாராளு மன்ற பிரதி பொதுச் செயலாளர் 15

# சபாநாயகர் பதவிக்கு மூன்று பேரின் பெயர்!

கொழும்பு, டிசெ. 15

வெற்றிடமாகவுள்ள சபாநாயகர் பதவிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதிச் சபாநாயகர் றிஸ்வி சாலி, பாராளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பதி, லக்ஷ்மன் நிபுன ஆராச்சி ஆகியோரின் பெயர்கள் 15

# தமிழரசிலிருந்து சிலர் நீக்கம்! மேலும் சிலர் இடைநிறுத்தம்!!

## கூறுகிறார் சுமந்திரன்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 15

இலங்கை தமிழரசுக்கட்சியில் இருந்து சிலர் நீக்கப்படுவதுடன் சிலர் இடைநிறுத்தப்படுவர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்- 15

# தமிழரசுக் கட்சி மத்தியகுழு கூட்டத்தில் நேற்று குழப்பம்!

## மாவை சேனாதிராசா வந்த பின்னரே கூட்டம் நடத்தவேண்டும் என சிவமோகன் விடாப்பிடி

வவுனியா, டிசெ. 15

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் ஆரம்பத்தில் குழப்பம் ஏற்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியாவில் ஆரம்பமாகியது. இந்த நிலையில் கூட்டத்தின் ஆரம்பத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வந்த பின்னர் கூட்டத்தை ஆரம்பிக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கோரியமையால் கூட்டத்தில் 15

# ஜனாதிபதி அநுர இன்று இந்தியா பயணம்

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கிறார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி, 15

# விலகிச் செயல்பட்டவர்களை கட்சியிலிருந்து நீக்கவில்லை

## சிறிநேசன் எம்.பி. கூறுகிறார்

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 15

கடந்த தேர்தலில் கட்சியில் இருந்து விலகிச் செயற்பட்டவர்களை கட்சியில் இருந்து நீக்குவதாக ஏகமனதாகத் தீர்மானிக்கவில்லை. நானே தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு 15

# ஐந்தரை மணிநேரம் நடந்த தமிழரசின் கூட்டத்தில் முடிவுகள் எதுவுமே இல்லை!

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 15

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படாத நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி வாக்கெடுப்புக்காக அது ஒத்திவைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று காலை10.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

கூட்டத்தில் மாவை சேனாதிராசா கட்சியின் தலை மைப் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதால் அவருக்கு பதிலாக வேறொருவர் 15

# அரச உத்தியோகத்தர்களுடன் அணுகுவதற்கு முறையுள்ளது!

## அர்ச்சுனா எம்.பியின் செயல்பாடு குறித்து சிறிதரன் எம் பி. கருத்து

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 15

அரசு அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களைவிட கல்வித் தரத்தில் கூடியவர்களாகவும் இருப்பார்கள் எனவே அவர்களுடன் அணுகுவதற்கு முறையுள்ளது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழர் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் 15

# தையிட்டி போராட்டத்தின்போது பொலிஸாருடன் முறுகல்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 15

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக்கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அந்தக் கட்சியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் போக்கு ஏற்பட்டது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது. அத்தோடு, பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி குவிக்கப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 15



# மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக ஞானப்பிரகாசம்

மன்னார், டிசெ. 15

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக தற்போது மருதமடு அன்னை திருத்தல பரிபாலகராக பணியாற்றிவரும் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். 2017ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 76 வயதில் ஓய்வு பெற்றதை தொடர்ந்து அம்மறைமாவட்டத்திற்கு மன்னார் மறைமாவட்ட குருவாகிய அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை புதிய 15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு விசேட நிதி ஒதுக்கீடு அவசியம்

## ஒருங்கிணைப்புக் குழுவில் வலியுறுத்திய கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், டிசெ. 15

"வடக்கு - கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்கள். எனவே, அவற்றுக்கு என்று விசேட திட்டத்தை வகுத்து நிதி ஒதுக்கீடு செய்தோ, வெளிநாட்டு உதவிகள் பெற்றோ வடக்கு - கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யுங்கள்"- என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இருப்பதால் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு விசேட நிதி ஒதுக்கீடு தேவை. எனவே, அரசாங்க நிதியிலோ அல்லது வெளிநாடுகளின் நிதி உதவிகளைப் பெற்றோ விசேட திட்டங்களை அமைத்து அபிவிருத்தினை செய்ய வேண்டும்.

ஏனைய மாகாணங்களைப் போன்று இங்கும் அவ்வாறு செய்வதால் முன்னேற முடியாது. மேலும், கடந்த காலத்தில் யாழ். நகரத்தில் பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதும் யாழ். மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ். மாநகர சபைகளின் எந்தவித மான அபிப்பிராயங்களையும் கேட்காது திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது கடந்த கால அரசாங்கத்துக்கும் அதிலிருந்தவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. அதற்கான சகல திட்டங்களும் கொழும்பில் தான் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டங்கள் மனிதனால் செய்யப்பட்ட அனர்த்தம். இதனால்தான் இந்த வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது.

இவ்வாறான திட்டங்கள் இனியும் மேற்கொள்ளாது மக்களின் தேவைகளுக்கு ஏற்ப விசேட திட்டங்களை வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு உருவாக்கி முன்னோக்கிச் செல்ல வேண்டும். கடற்றொழில் அமைச்சராக உள்ளமையால் அமைச்சரவையிலும் இந்த விடயத்தை பேசி அதற்கான திட்டத்தை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சந்திரசேகர் உருவாக்க வேண்டும்" - என்றார்.(எ)

# 27 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதானார்

கிளிநொச்சி, டிசெ. 15

27 லீற்றர் கசிப்பு மற்றும் 120 லீற்றர் கோடாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 27 லீற்றர் கசிப்பும் 120 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டதுடன், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

தடயப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சாதனையாளர் கௌரவிப்பு

வவுனியா, டிசெ.15

வவுனியா, அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் எம். எம். அன்பஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. முன்னதாக விருந்தினர்கள் பிரதான வீதியில் இருந்து பாண்ட் அணிவகுப்புடன் மாலை அணிவித்து வரவழைக்கப்பட்டதுடன் பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்கள், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் மற்றும் இணைப்பாடவிதான செயல்பாடுகளில் மாகாணம், மாவட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் சாதனைகளை நிலைநிறுத்திய மாணவர்கள் என 77 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கு விருந்தினர்களால் சின்னம் அணிவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ. ஏ. சரத்சந்திர, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ்க் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைப்பதே எம் நோக்கம்

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ. 15

தமிழ்க் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைப்பதே எமது நோக்கம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழ் அரசுக்கட்சி சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்தவர்கள் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட சிறீதரன் எம். பி.,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட இளைஞர்கள் மற்றும் பெண்கள் புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனித்து போட்டியிட்டு தேசியத்துடன் பயணிக்கும் தமிழ்க் கட்சிகளோடு ஆட்சியமைப்பதே எம் நோக்கம் என்றும் கூறினார். (எ)

# நாங்கள் டீல் பேச வரவில்லை அபிவிருத்தி செய்ய வந்தோம்

## யாழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

நாங்கள் டீல் பேசுவதற்கு வரவில்லை, ஊழலற்ற ஆட்சி மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே வந்தோம் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் டீல் பேசுவதற்கு வரவில்லை. ஊழலற்ற ஆட்சியில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே வந்தோம். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை.


மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் என்பது அதிகாரிகளை அச்சுறுத்துவதல்ல. மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதாகும். இதற்கு அனைவரது ஒத்துழைப்புகளும் தேவை.

அரசியல்வாதிகளால் மட்டும் இதனை செய்ய முடியாது. அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு - பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் அரசியல் தலையீடு இருந்தமையால் வினைத்திறனாக செயல்படாதிருந்தமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இனி அவ்வாறு தலையீடுகள் கிடையாது. சுதந்திரமாக செயல்பட்டு மாவட்டத்தை, நாட்டை முன்னேற்ற வேண்டும்.

தற்போது கிடைத்துள்ள மக்கள் ஆணையை அனைவரும் மதித்து நடக்க வேண்டும். இந்த ஆணை என்பது இது வரை காலமும் இடம்பெற்ற ஊழல் ஆட்சி, அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு எதிராகவே இந்த மாற்றம் ஏற்பட்டது.

மேலும், இந்த அரசாங்கம் கிராமங்களை நோக்கியே வேலைத் திட்டங்களை செயல்படுத்தவுள்ளது. எனவே, கடந்த காலங்களை போன்று அல்லாமல் மக்களுக்கு உண்மையுடனும் விசுவாசத்துடனும் சேவையாற்ற வேண்டும்"- என்றார்.(எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உணவுப் பொதிகள் வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ. 15

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொடிகாமம் பகுதி மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மதிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொடிகாமம் போகட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கும், தவசிகுளம், பாலாவி வடக்கு கிராம மக்களுக்கும் 260 உணவுப் பொதிகள் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்களால் வழங்கப்பட்டன(எ-02)

# காய்ச்சல், உடம்பு வலி ஏற்பட்டால் மருத்துவரிடம் ஆலோசனை பெறுக

## பொது வைத்திய நிபுணர் பிரசாந் அறிவுறுத்தல்

வடமராட்சி டிச 13


காய்ச்சல், உடம்பு வலி, மூட்டு வலி, கண் சிவப்பாதல், வயிற்று வலி போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் ஆலோசனை பெறுமாறு பருத்தித்துறை ஆதார மருத்துவமனை பொது வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாந் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் நோய்த் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் குறித்த ஆலோசனையை பின்பற்றினால் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

சேற்று நிலங்களில் வேலை செய்தவர்கள், விவசாயிகள், மீனவர்கள், அண்மைய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வெள்ள நீரில் நடந்து திரிந்தவர்கள், பருத்தித்துறை சுகாதார பணிமனையை தொடர்புகொண்டு, நோய் வருவதற்கு முன்பே தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்தி உயிராபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். இவை தடுப்பூசிகள் அல்ல, மாத்திரைகள். இவற்றை அச்சப்படாமல் பயன்படுத்தலாம்- என்றார்.

(எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பதவிகளை பயன்படுத்தி மக்களுக்கு உரிய சேவைகளை செய்ய வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

"பதவிகள் சேவை செய்வதற்காக வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்களுக்கு சரியான சேவைகளை வழங்க வேண்டும். இல்லாவிடின் அந்தப் பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை"- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் ஏழுர் மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் இ. கணேசானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர், சாதனை படைத்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசில்களை வழங்கினார்.

ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுகையில், "நாங்கள் கல்வி கற்ற காலத்துக்கும் தற்போதைய காலத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கின்றது.

அன்று எங்களின் பாடசாலை அதிபர்தான் மேலதிக நேர வகுப்புகளை எடுத்தார். அவர்களைப்போன்ற ஆசிரியர்கள்தான் இன்றும் எங்களுக்கு முன்னுதாரணமான "கதாநாயகர்களாக" இருக்கின்றார்கள். அன்றைய காலத்தில் நாம் தனியார் கல்வி நிலையங்களுக்கு கூட செல்வதில்லை. அதற்கான தேவைப்பாடு ஏற்படவில்லை. கல்வியால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். கிராமத்தின் அபிவிருத்தியோ, எதுவாகினும் கல்வியால் அந்த மாற்றங்களை உருவாக்க முடியும்.

அதேநேரம், கல்வியில் எவ்வளவு உயர்ந்து விளங்கினாலும் நாங்கள் பண்புள்ளவர்களாக இல்லாவிட்டால் எம்மை யாரும் மதிக்கமாட்டார்கள். உயர் பதவியிலிருந்தாலும் பண்பு இல்லாவிட்டால் யாரும் எம்மை மதிக்க மாட்டார்கள். பதவி வரும் போது பணிவு வர வேண்டும்.

இன்றைய மாணவ சமுதாயத்துக்கு பணிவு, இரக்கம், அன்பு என்பவற்றை ஆசிரியர்கள் கூடுதலாக போதித்து அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவேண்டும். ஆசிரியர்கள் அன்றைய காலத்தில் எமக்கு அடித்தால் நாம் வீட்டில் சென்று சொல்வதற்குப் பயப்படுவோம். ஏனென்றால் வீட்டிலும் மீண்டும் அடி விழும். ஆனால், இன்று அது தலைகீழாகிவிட்டது. ஆசிரியர்கள், மாணவர்களை தண்டிப்பது என்பது அவர்களை எதிரியாகக் கருதி அல்ல. அவர்களின் வளர்ச்சிக்காகவே தண்டிக்கின்றனர்.

இன்று தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பதற்கே எல்லோரும் தயங்குகின்றனர். அந்தளவு தூரத்துக்கு பயம். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்கிப்போகின்றனர்.

அதேபோல, வீதிகளில் குப்பை போடுகின்றனர். 1970 ஆம் 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம்தான் மிகத் தூய நகரம். இன்று மிக குப்பையான நகரமாக மாறியிருக்கின்றது.

மோட்டார் சைக்கிள்களில், கார்களில் வந்து குப்பைகளை கொட்டிவிட்டு செல்கின்றனர். வீதியிலும், வாய்க்காலிலும் குப்பை போடுவது நாங்கள் தான். வீதிகளையும், வாய்க்கால்களையும் ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டுவதும் நாங்கள் தான். பின்னர் வெள்ளம் வந்து விட்டது என்று கத்துவதும் நாங்கள்தான்.

எங்களின் மனநிலை மாற வேண்டும். இளமையில் - இந்த மாணவர்களிடத்தில் சரியான பழக்க வழக்கங்களை - விழுமியங்களை ஆசிரியர்கள் விதைக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். நாம் மற்றவருக்கு உதவவேண்டும். அப்படிச் செய்தால் எமக்கு பல மடங்கு திருப்பிக்கிடைக்கும்.

இந்தப் பழக்கங்களை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்க வேண்டும். எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் சமூகத்தில் கல்வியறிவுடன் சிறந்த ஒழுக்கத்துடன் வளரவேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்"- என்றார்.

(எ-05)

# போலிப் பதிவுடன் 6, 000 கார்கள் நாடு முழுவதிலும் பயன்பாட்டில்

## சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை கண்டறிவது எவ்வாறு?

கொழும்பு, டிசெ. 15

சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை கண்டறிவது எவ்வாறு என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விளக்கமளித்துள்ளது.

இதேவேளை, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் போலியாக பதிவு செய்யப்பட்ட சுமார் 6, 000 கார்கள் நாடு முழுவதிலும் பயன்பாட்டில் இருப்பதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய சுங்க வரியை செலுத்தாமல் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும் இந்த வாகனங்களில் அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்கள் விசாரணைக்காக ஆணைக்குழுவால் கையகப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்காகவும் சுங்க வரிகள் மற்றும் பிற கட்டணங்களை வசூலிப்பதற்காகவும் இலங்கை சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த வாகனங்களின் இரண்டாவது அல்லது அடுத்தடுத்த உரிமையாளர்கள் கடுமையான சிரமங்களையும், இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இதன்படி, இவற்றுக்கு ஒரு தீர்வாக வாகனத்தை கொள்வனவு செய்யும் நபர் வாகனத்தை வாங்குவதற்கு முன்னர், இறக்குமதி வரிகள் மற்றும் பிற கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட்டதா என்பதை சரிபார்க்க, பொருத்தமான இணையவழி அணுகலை எளிதாக்குவதற்கு ஆணைக்குழு இலங்கை சுங்கத்துக்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

இதன் பிரதிபலிப்பாக சுங்கத்துறை இணையத்தளம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளதுடன் இதன் ஊடாக ஒருவர் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வாகனம் சட்டபூர்வமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு சுங்க வரிகள் முறையாக செலுத்தப்பட்டுள்ளதா என்பதை சோதித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் காணப்படுகிறது.

https://services.customs.gov.lk/vehicles என்ற இணைப்பைப் பார்வையிடுவதன் மூலம் உங்களுக்குச் சொந்தமான வாகனம் அல்லது வாங்க எதிர்பார்க்கப்படும் வாகனம் சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய முடியுமென இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)


# பொருளாதார மத்திய நிலையம் உடன் திறக்கப்பட வேண்டும்

## வவுனியா விவசாயிகள் கோரிக்கை

வவுனியா, டிசெ. 15

வவுனியாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் ஆறு ஆண்டுகளுக்கு மேலாக திறக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை பகிரங்க கேள்வி கோரல் மூலமாக வழங்கி அதனைச் செயல்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



குறிப்பாக 295 மில்லியன் ரூபாய் செலவில் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக்குளத்தில் அமைப்பதா? என்று அரசியல்வாதிகளின் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் மூன்று முறிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையமானது இதுவரை திறக்கப்படாத நிலையில் கட்டடம் சேதமடையும் நிலையில் காட்சியளிக்கிறது.

இந்த நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை பகிரங்க கேள்வி கோரலூடாக வழங்கும் பட்சத்தில் விவசாயிகள் நியாயமான விலைக்கு தமது உற்பத்திப் பொருட்களை வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது வவுனியாவில் உள்ள மொத்த மரக்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகார போக்கோடு செயல்படுவதாகவும் 10 வீதம் என்ற தரகுப்பணத்தை பெறும் நிலை காணப்படுவதோடு சில வேளைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளுக்கு பணம் வழங்க மறுக்கின்றனர்.

எனவே, பகிரங்க கேள்விக் கோரலுக்கு உட்படுத்துகின்ற போது விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என விவசாயிகள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரும் அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ- 10)

# யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஒளிரமறுக்கும் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் - பலாலி வீதி, உரும்பிராய் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் மிக நீண்டகாலமாக ஒளிராததால் தாங்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இலங்கை மின்சார சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய இரண்டு அரச நிறுவனங்களுக்கும் உரித்தான சுமார் 20இற்கும் அதிகமான வீதி விளக்குகள் குறித்த வீதியில் பொருத்தப்பட்டுள்ளன. இருப்பினும் மிக நீண்ட காலமாக அந்த வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை.

சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களான வலி. கிழக்கு பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை ஆகியவற்றில் தடவைகள் நாங்கள் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கியும் அவர்கள் அந்த வீதி விளக்குகள் ஒளிர்வதற்கான வேலைத்திட்டங்களை செய்யவில்லை.

உரும்பிராய் சந்தியில் அதிகளவான வர்த்தக நிலையங்கள் மற்றும் மதுபான நிலையம் காணப்படுவதால் அங்கு சன நெரிசல் காணப்படுகிறது. அதனால், குறித்த பகுதியில் தொடர்ந்து வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன. ஆகையால் இந்த பகுதியில் அவசியமாக வீதி விளக்குகள் தேவை- என்றனர்.

(எ-05)

# சபாநாயகர் இராஜினாமா பாராட்டத்தக்க விடயம்!

## நாமல் எம். பி. சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 15

சபாநாயகர் அசோக ரன்வல தனது கல்வித் தகுதி குறித்த கேள்விகளால் பதவியை இராஜினாமா செய்தமை பாராட்டுக்குரிய விடயம் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாமல் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் உள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக தேசிய மக்கள் சக்தி வழங்கிய உறுதிமொழியின்படி தங்கள் தகுதிகளை நிரூபிக்க முடியாதவர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

தூய்மையான நாடாளுமன்றத்தை பேணுவது ஜனாதிபதி அநுரகுமாரவின் பார்வையாக இருந்தால், தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தகுதிகள் குறித்து பொதுமக்களை தவறாக வழிநடத்துவது உண்மையில் கவலையளிக்கிறது எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி சபாநாயகர் உட்பட மேலும் பலர் போலிப்பட்டங்களுடன்தான் உள்ளனர்

**ஊபெயர் பட்டியலை வெளியிட்டார் முன்னாள் எம். பி. தொலவத்த**

கொழும்பு, டிசெ. 15

**அசோக ரன்வல மாத்திரமின்றி பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி, நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக, மின்சக்தி அமைச்சர் புண்ணியசிறீ குமார ஜெயக்கொடி, ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர உள்ளிட்டோரின் கல்வித் தகைமைகள், பட்டங்கள் உண்மையானவையா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம் நாம் சி தொலவத்த தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முந்தைய பாராளுமன்றத்தில் சாதாரண தரத்தில் கூட சித்தி பெறாதவர்கள் இருந்த போதிலும், அவர்கள் அதனை மறைக்கவில்லை. தமது கல்வித் தகைமைகள் தொடர்பில் மக்களிடம் பொய் கூறவில்லை.

பாராளுமன்றத்தின் இறையாண்மையை கேள்விக்குள்ளாக்கும் வகையில் சபாநாயகர் இல்லாத கலாநிதிப் பட்டத்தை இருப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றியிருக்கின்றார்.

அவர் மாத்திரமின்றி இவ்வாறு மக்களை மேலும் பலர் ஏமாற்றியிருக்கின்றனர். பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி தன்னை விசேட வைத்திய நிபுணர் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அவர் சாதாரண வைத்தியரொருவர் மாத்திரமே. அதேபோன்று, நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலகவுக்கும் கலாநிதிப் பட்டம் இல்லை எனக் கூறப்படுகிறது.

மின்சக்தி அமைச்சர் புண்ணியசிறீ குமார ஜெயக்கொடிக்கும் உயர் கல்வித் தகைமை, பட்டம் எதுவும் இல்லை எனக் கூறப்படுகிறது. இவ்வாறு பொய் கூறிய ஒவ்வொருவரதும் பட்டங்கள் கல்வித் தகைமைகள் பாராளுமன்ற இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர போன்றோரும் இந்த நிலைமையிலா இருக்கின்றனர் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ளது தனிப்பட்ட நபர்கள் குறித்து எமக்கு பிரச்னை இல்லை. ஆனால், இவர்கள் ஏன் மக்களுக்கு பொய் கூறினார்கள். அமைச்சரவை பேச்சாளரிடம் இது தொடர்பில் கூறிய போது நாம் இதனைப் பெரிதாக எண்ணவில்லை என்று கூறுகின்றார். மக்கள் நேரடியாக கேள்வியெழுப்பும் இவ்வாறான விடயங்களை அரசாங்கத்தால் உதாசீனப்படுத்த முடியாது.

அரசியலில் கல்வித் தகைமையை ஒரு பிரச்னையாகக் காண்பித்த தேசிய மக்கள் சக்தி இதற்கு நிச்சயம் பதிலளித்தே ஆக வேண்டும்- என்றார். (எ)

# அரிசி பதுக்கலை தடுக்க தொடரும் சுற்றிவளைப்பு

**இறக்குமதியால் வீழ்ச்சியடைந்தது அரிசி விலை**

கொழும்பு, டிசெ. 15

நாடளாவிய ரீதியில் அரிசி பதுக்கலை தடுக்கும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் சுமார் 75 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டதாக அதன் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் சுற்றிவளைப்புகளை நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பு சந்தைக்கு வருவதால் அரிசியின் விலை குறைந்துள்ளதோடு, சில பிரதேசங்களில் நெல் விலையும் குறைவடைந்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தால் 5,200 மெற்றிக் தொன் நாட்டரிசியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் முதல் தொகுதி இம்மாதம் 19ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புதிய சபாநாயகர் நியமனம் 17ஆம் திகதி இடம்பெற வேண்டும்

**அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு**

கொழும்பு, டிசெ. 15

அசோக ரன்வலவின் இராஜினாமாவால் வெற்றிடமாகியுள்ள சபாநாயகர் பதவிக்கான புதிய நியமனம் எதிர்வரும் 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில், அன்றைய தினம் புதிய சபாநாயகர் நியமனம் தொடர்பான வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற வரலாற்றில் சபாநாயகர் ஒருவர் பதவி விலகுவது இதுவே முதல் தடவை என பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் இராஜினாமா கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடமோ அல்லது ஜனாதிபதியிடமோ வழங்க முடியும்.

இராஜினாமா கடிதம் ஜனாதிபதிக்கு கிடைத்த பின்னர் அக்கடிதம் தொடர்பில் ஜனாதிபதி தீர்மானம் எடுக்க முடியும்.

சபாநாயகரின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டால், புதிய சபாநாயகரை மீண்டும் பாராளுமன்றம் தெரிவு செய்ய வேண்டும்.

பொதுச் சட்டத்தின் கீழ் வாக்களித்து அல்லது நியமனம் மூலம் புதிய சபாநாயகரை தெரிவு செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# தேசிய ஒலிம்பிக் குழுவுக்கான நிதியுதவி இடைநிறுத்தப்பட்டது!

கொழும்பு, டிசெ. 15

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் பேரவை ஆகியவை வழங்கும் நிதி உதவி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், ஒலிம்பிக் வீரர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் தொடர்ந்து வீரர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் என சர்வதேச ஒலிம்பிக் குழு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் விசேட பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் தற்போதைய பதவிக்காலம் 2026ஆம் ஆண்டு ஏப்ரலுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 15

நாட்டின் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுத்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை பிரதேச செயலகத்துக்கு 2 கட்டங்களின் கீழ் அவதானமாக இருக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பதுளை மாவட்டத்தில் எல்ல, பசறை மற்றும் ஹாலியால, கண்டி மாவட்டத்தில் மெத தும்பற ஆகிய பகுதிகளின் முதலாம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# தமிழ் தேசிய பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கல்



வவுணதீவு, டிசெ. 15

மட்டக்களப்பு, வவுணதீவில் தெரிவு செய்யப்பட்ட கர்ப்பவதி களுக்கு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழி பசி தீர்த்தல் என்ற திட்டத்தை கொரோனாப் பேரிடர் ஏற்பட்ட காலத்திலிருந்து தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் முன்னெடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாகவே வவுணதீவுப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பவதிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ. சூரியகுமார், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆகியோர் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

வவுணதீவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பாலக்காடு, ஈச்சந்தீவு, சொருவமுனை, இறக்கத்துமுனை, கரவெட்டி ஆகிய பகுதிகளிலிருந்து குடும்பநல உதவியாளர்களால் அடையாளங் காணப்பட்ட கர்ப்பவதிகளுக்கே இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ-02-05)

# மகிந்தவை படுகொலை செய்யவா அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது

**பொதுஜன பெரமுன பெரும் சந்தேகம்**

கொழும்பு, டிசெ. 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை படுகொலை செய்வதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவா 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளார்கள் என்ற சந்தேகம் எழுகிறது. அரசியல் பழிவாங்கலுக்காகவே பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பல பிரச்னைகள் காணப்படுகின்ற நிலையில் அப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை அரசாங்கம் சடுதியாக குறைத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நிமித்தம் சேவையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் 116 பேர் சேவையிலிருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டிருந்தவர்கள் இவ்வாறு சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் எண்ணக்கரு நாட்டில் இன்றும் காணப்படுகின்ற நிலையில் இவ்வாறு பாதுகாப்பை குறைப்பது முறையற்றது.

மகிந்த ராஜபக்ஷவை படுகொலை செய்வதற்காகவா அவரது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுகிறது- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.12.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், கார்த்திகை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக புதுடில்லி செல்கின்றார். ரணில் - மோடி உரையாடல்களில் முதன்மை பெற்றிருந்த திட்டங்களின் எதிர்காலம் தொடர்பிலேயே புதுடில்லி அதிக கவனம் செலுத்தும். அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இவ்வாறானதொரு வெற்றியை பெறும் என்பதை புதுடில்லி கணித்திருக்க வாய்ப்பில்லை. ஜனாதிபதித் தேர்தலின் போதும் சரி - அதன் பின்னர் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போதும் சரி - தேசிய மக்கள் சக்தியின் வெற்றி தொடர்பில் பதுடில்லி மகிழ்சியுடன் கூடிய ஈடுபாட்டை காண்பித்திருக்கும் என்று கருத முடியாது.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை இந்திய தூதரகம் மகிழ்சியுடன் நோக்கவில்லை - அதற்குப் பதிலாக, கொழும்பின் பிரதான கட்சியொன்றுடன் பேரம் பேசும் அரசியலை செய்வதுதான் தமிழ் மக்களின் நலன்களுக்கு உகந்தது என்னும் கருத்தே தூதரக வட்டாரங்களில் மேலோங்கியிருந்தது. தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனான உரையாடல்களின் போதும் நட்புரீதியில் அவ்வாறான கருத்துக்களே முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் இடம்பெற்ற விடயங்களோ அனைவரது கணிப்புகளுக்கும் மாறாகவே நிகழ்ந்தது.

இறுதியில் - தமிழ் மக்களின் பெரும்பான்மையானவர்களாலும் முஸ்லிம் மக்களாலும் பெரும்பான்மையாக ஆதரிக்கப்பட்ட சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி படுமோசமான தோல்வியையே சந்தித்திருந்தது. ஒரு வேளை ரணில் - சஜித் கூட்டாக தேர்தலை எதிர்கொண்டிருந்தால், நிலைமைகள் ஒரு வேளை மாற்றமடைந்திருக்கலாம். ஆனால் புதுடில்லியின் கணிப்புக்களை மீறியே விடயங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. தற்போதுள்ள நிலையில் அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் ஒரு பலமான அரசாங்கம் - அதற்குமப்பால் தேசிய மக்கள் சக்தி ஒரு சக்திவாய்ந்த கட்சி.

அநுரகுமார திஸநாயக்க இந்தியா தொடர்பில் மிகவும் தூர நோக்குடனும் யதார்த்தமாகவும் பேசிவருகின்றார். இந்த அணுகுமுறையில் நகர்ந்தால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கும் புதுடில்லிக்குமான உறவில் சிக்கல்கள் ஏற்படப் போவதில்லை - ஆனால், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை என்று வருகின்ற போது அநுர அரசாங்கத்தின் அணுகுமுறை எவ்வாறு அமையும் - புதுடில்லி எவ்வாறான விடயங்களை வலியுறுத்தும் என்பதே முக்கியமானது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பில் கொள்கை ரீதியான எதிர்ப்பை ஜே.வி.பி. கடந்தகாலத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றது. ஒப்பந்தத்தின் விளைவான, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களையே வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் அநுர அரசாங்கம் பேசிவருகின்றது. இப்படித்தான் கோட்டாபயவும் பேசினார். அவரும் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் நோக்கிலேயே புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முயற்சித்தார்.

13ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பது என்பது வடக்கு, கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மீதான இந்திய ஈடுபாட்டுக்கு முற்றுபுள்ளியிடுவதாகும். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படி, 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கும் முயற்சியின் போது, எவ்வாறானதொரு தீர்வு அதற்கு மாற்றாக முன்வைக்கப்படுகின்றது என்பதில் தலையீடு செய்யும் அதிகாரம் இந்தியாவுக்குண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்தம் அதற்கான வாய்ப்பை இந்தியாவுக்கு வழங்குகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்பது ஈழத் தமிழ் மக்களின் பெயரால் எக்காலத்திலும் தலையீடு செய்யும் உரிமத்தை இந்தியாவுக்கு வழங்கியிருக்கின்றது. அதனை புதுடில்லி எவ்வாறு பயன்படுத்தும்?

அநுரகுமாரவின் விஜயத்தின் போது 13ஆவது திருத்தம் தொடர்பில் புதுடில்லி எவ்வாறான கருத்துக்களை வெளிப்படுத்தும் - அதற்கு அநுரவின் பதில் எவ்வாறாக அமையும் என்பது முக்கியமானது. இந்த விடயங்களை தமிழர் தரப்புக்கள் கவனமாக உற்றுநோக்க வேண்டும்.

# ஒருங்கிணைப்புக் குழு தலைவருக்கு யாழ்.செயலகத்தினுள் அலுவலகமா?

## இடம்மாற்றக் கோருகிறது பொதுஜன பெரமுன

*யாழ்ப்பாணம், டிசெ. 15*

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ்.மாவட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், அலுவலக அறையினை தேர்வுசெய்தமை வருத்தமளிப்பதாக சிறி லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர்-

பொதுஜன பெரமுன கட்சியில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி எனும் அடிப்படையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடைமுறைகள் குறித்து ஆரம்பம் முதலே கரிசனை கொண்டுள்ளேன்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இதற்கு முன்பு செயற்பட்டவர்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் தமக்காக தேர்வு செய்த நிர்வாக, அலுவலக அறை மற்றும் இன்னபிற விவகாரங்கள் தொடர்பாக எனது நிலைப்பாட்டையும் எதிர்ப்பையும் அழுத்தமாக வெளியிட்டுள்ளேன்.

அந்த வகையில், மாற்றம் எனும் எண்ணக்கருவுடன் மக்கள் ஆணையை பெற்ற தேசிய மக்கள் கட்சியில் இருந்து புதிதாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் இராமலிங்கம் சந்திரசேகர், பழைய தலைவர்கள் சிலரைப் போலவே மாவட்ட நிர்வாக கட்டமைப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், மாவட்ட செயலகத்தின் மையத்தில் தனக்கான அலுவலக மையத்தைப் பெற்றிருப்பது மக்களும் நானும் அவர்களிடம் எதிர்பாராத ஒரு செயற்பாடு ஆகும்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தமக்கான அலுவலக மையத்தை அவர்கள் தேர்வு செய்வதற்கான இடம் சட்டத்தில் உண்டு என்றாலும், யாழ்.மாவட்ட செயலகத்தின் வழமையான செயற்பாடு பாதிக்கப்படாத வகையில் மாற்று இடம் ஒன்றை தேர்வு செய்ய முன் வருவார் என எதிர்பார்க்கிறேன் - என்றார். (அ)

# எலிக்காச்சல் தடுப்பு செயல்பாடு வடமராட்சி பகுதியில் மும்முரம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 15*

வடமராட்சி பகுதிகளில் எலிக்காச்சலால் பாதிக்கப்பட்ட பலர் இனங்காணப்பட்டநிலையில், தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், வடமராட்சி கிழக்கு பகுதிகளில் சுகாதாரப் பிரிவினர் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு கருத்துக்களை மக்களுக்கு வழங்கியதுடன் தடுப்பு மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

கரவெட்டி அம்பன் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.சிவசுதன் தலமையிலான குழுவினர் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைய நாட்களில் வடமராட்சி பகுதியில் எலிக்காய்ச்சலா 4 மரணங்கள் நிகழ்ந்துள்ளதுடன், தொற்றுக்கு உள்ளான பலர் இனங்காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை இவ்வருடம் 2.2 மில்லியனை எட்டும்

*கொழும்பு, டிசெ. 15*

இந்த ஆண்டு சுமார் 1.9 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 90 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வருகைதந்துள்ளதாக அதன் தலைவர் புத்திக ஹேவாவசம் குறிப்பிட்டுள்ளார்.

டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.2 மில்லியன் என்ற இலக்கை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும், அந்த இலக்கை எட்டிய பின்னர், 2018 ஆம் ஆண்டிற்கு பின்னர் இரண்டு மில்லியன் இலக்கை எட்டுவது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கொழும்பு உணவகம் ஒன்றில் தீ!


*கொழும்பு, டிசெ. 15*

கொழும்பு கங்காராம விகாரைக்கு அருகில் பெரஹெர மாவத்தையில் இயங்கி வந்த உணவகம் ஒன்றில் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உணவகத்தில் உள்ள எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், யாருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் மாறுவோம்!

வெ. இன்சுவை

நாம் பிறக்கும் போது வெறுங்கையுடன் தான் பிறக்கிறோம். இந்த உலகை விட்டு நீங்கும் போதும் எதையும் எடுத்துச் செல்வதில்லை. கோடிகளில் புரண்டாலும் எதுவும் உடன் வராது. ஆகவே வாழ்கின்ற நாள் வரை மகிழ்வாய், நிறைவாய் வாழ்ந்து விட்டுப் போகலாமே! கூடுமான வரை சக உயிர்களிடம் அன்பையும், அக்கறையையும் வெளிப்படுத்தலாமே! நாம் நடந்து போகும் பாதையெங்கும் மகிழ்ச்சிப் பூக்களைத் தூவிக் கொண்டே சென்றால், அந்த நறுமணம் பல காத தூரம் வீசும்.

அலெக்சாண்டர், தான் இறப்பதற்கு முன் தன் கடைசி விருப்பங்களைக் கூறினார்.

முதலாவது விருப்பம்: என் சவப்பெட்டியை மருத்துவர்கள்தான் சுமக்கவேண்டும். எந்த மருத்துவ ராலும் யாரையும் குணப்படுத்த முடியாது என்பதைத் தெரிவிக்க மருத்துவர்கள் சவப்பெட்டியை எடுத்துச் செல்ல வேண்டும்.

இரண்டாவது விருப்பம்: கல்லறைக்குச் செல்லும் வழியில் தங்கம், வெள்ளி மற்றும் பிற விலைமதிப்பற்ற கற்களை வீச வேண்டும். எவ்வளவு செல்வத்தைக் குவித்தாலும், இந்த உலகத்தை விட்டு வெளியேறும் போது ஒரு துகள் கூட நம்முடன் வராது என்பதை உணர்த்த வேண்டும்.

மூன்றாவது விருப்பம்: சவப்பெட்டிக்கு வெளியே என் இரண்டு கைகளும் தொங்க விடப்பட வேண்டும். சவப்பெட்டிக்கு வெளியே என் கைகள் தொங்குவதால் நான் வெறும் கையுடன் செல்கிறேன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மண்ணாசை கொண்டு, இரத்த ஆறுகளை ஓட விட்ட மாவீரன்அலெக்சாண்டர் தன் 32 -ஆவது வயதில் மரணித்தார்.

வாழ்க்கையின் நிலையாமையைப் புரிந்து கொண்டவர்கள் நல்வினைஆற்றுவார்கள். அவர்கள் கண்களில் அருளும், கனிவும், கருணையும் சுரக்கும்.

ஒரு வழிப்போக்கர் ஒரு சூஃபியைச் சந்திக்க அவர் வீட்டுக்கு வந்தார். சூஃபியினுடைய வீட்டைப் பார்த்தவருக்குப் பேரதிர்ச்சி. மிக மிக எளிமையான அந்த அறையில் எந்த இருக்கையும் காணப்படவில்லை. ஒரு பாய், ஒரு மண்ணெண்ணெய் விளக்கு ஆகியவை மட்டுமே இருந்தன.

வழிப்போக்கர் கேட்டார், “உங்களுடைய ஆசனங்கள் எங்கே? ”

சூஃபி அந்த நபரிடம், “ உங்களுடைய ஆசனம் எங்கே?” என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதர், “என்னுடையனவா? நான் இங்கே ஒரு வழிப்போக்கன் மட்டுமே, ஒரு பார்வையாளர் தான்” என்றார். சூஃபி, “நானும் தான்” என்றார்.

ஆக நாம் அனைவரும் ஒரு சில காலம் மட்டுமே இந்த பூமியில் தங்கிச் செல்லப் போகிறோம். நிரந்தரமானவர் ஒருவரும் இல்லை. இதைப் புரிந்து கொண்டு செயல்படுபவர்கள் இந்த உலகின் அச்சாணி எனலாம். பணம் சார்ந்த இந்த உலகில், மனிதத்தன்மையோடு இயங்கும் நல்ல உள்ளங்களைக் காணும் போது, மனதில் மகிழ்ச்சி அலைகள் பொங்குகின்றன. இதயம் ஈரமாகிறது; மனம் அவர்களை வாழ்த்துகிறது. வெளிச்சத்துக்கு வராத எத்தனையோ தர்மச் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில மட்டுமே ஊடக வெளிச்சம் பெறுகின்றன.

முகநூலில் வந்த சில காணொலிகள் மண்ணுலக தெய்வங்களைப் படம்பிடித்துக் காட்டின. அது குழந்தைகளுக்கான ஆயத்த உடைகள் மற்றும் பொம்மைகள் கடை. புதிதாக திறக்கப்பட உள்ளது. ரிப்பன் கட்டிவைத்திருந்தார்கள். பொதுவாக, கடை திறப்பு என்றால் நடிகர், நடிகையர்களைத்தான் அழைக்கிறார்கள். அதற்குப் பல லட்சங்கள் அவர்களுக்குத் தர வேண்டும். பிரபலங்களை வைத்துத் திறந்தால், கடைக்கு அதுவே விளம்பரமாகிவிடும் என்று நினைக்கிறார்கள். நான் பார்த்த காணொலியில் அப்படி எந்த பிரபலமும் தென்படவில்லை. ஓர் ஏழைப் பெண் கையில் ஒரு குழந்தையுடனும், இடுப்பில் ஒரு குழந்தையுடனும் கடை முன் நின்றாள். அவள் ரிப்பனை வெட்டி கடையைத் திறந்தாள். உடன் கடை முதலாளி மட்டும் நின்றிருந்தார். அப்பெண்ணை அவர் உள்ளேஅழைத்துப் போனார். குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு பொம்மையை எடுத்துக் கொடுத்தார். அச்சிறுவனின் முகத்தில் தோன்றிய பிரகாசம் - அது நூறு சூரியனின் ஒளிக்கு இணையானது. பின் ஆயத்த ஆடைகளைக் கொடுத்து குழந்தைகளுக்கு அணிந்து விடச் சொன்னார். புதிய உடைகளில்அக்குழந்தைகள் அழகாக மாறினர். பின் மூன்று பெரிய பைகள் நிரம்பும் அளவுக்கு உடைகளைக் கொடுத்து அனுப்பினார். அந்தப் பெண் அவரை விழுந்து வணங்கி விட்டு, கை நிறைய பைகளுடனும், மனம் நிறைய மகிழ்ச்சியுடனும் சென்றதைப் பார்த்த பொழுது, என்னுள் தோன்றிய உணர்வுகளை எழுத்தில் வடிக்கத் தெரியவில்லை.

இதுபோல் நிறைய நல்ல உள்ளங்கள் இருக்கின்றன. நமக்குத் தெரிவதில்லை. இன்னொரு செய்தி. ஒரு சிறுவன் சாலையில் இருந்த குழியில் தவறி விழுந்து இறந்து விட்டான். அழுது, அரற்றி தன்னைத் தேற்றிக் கொண்ட அவன் தந்தை என்ன செய்தார் தெரியுமா? மூட்டை சிமெண்ட் மற்றும் மண்வெட்டி சகிதம் கிளம்பி தன் கண்ணில் பட்ட அத்தனை குழிகளையும் அடைத்தார். எவ்வளவு மகத்தான சேவை இது! தன் மகனைப் போல் இன்னொரு உயிர் பறிபோய் விடக் கூடாது என்ற நல்லெண்ணம்.

இதே போல வேறு சில மனிதநேயத்தைப் பறைசாற்றும் சில காணொலிகளைக் கண்டேன். ஒரு பெண் தன் குழந்தையுடன் நடந்து போய்க் கொண்டிருக்கிறாள். ஒரு கடையில் குழந்தைகள் சைக்கிள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்த சைக்கிள் வேண்டும் என அக்குழந்தை அடம்பிடிக்கிறது் அழுகிறது. அங்கிருந்து நகர மறுக்கிறது. தாய் அதை இழுத்துக்கொண்டு போகிறாள். ஓர் இளைஞன் இதை கவனித்துக் கொண்டிருக்கிறான். உடனே போய் அந்த சைக்கிளை விலைக்கு வாங்கி ஓடிப் போய் அந்தச் சிறுவனிடம் கொடுக்கிறான். இருவர் முகத்திலும் மலர்ச்சி.

ஒரு சிலர் சமுதாயம் என்னும் தூணைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தேரை இழுப்பதற்கு எத்தனை கைகள் தேவைப்படுகின்றன? ஒருவராலும் அதைத் தனியாக இழுக்க முடியாது. பாரத்தைப் பகிர்ந்து கொள்வதால் செயல் எளிதாகிறது. அதேபோல நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த சமுதாயப் பணிகளைச் செய்தால், சமுதாயம் மேன்மையுறும்.

## இந்தவார ராசிபலன் 15.12.2024 - 21.12.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 30
நல்ல நேரம்: 09.21 - 10.51 ராகு காலம் : 04.51 - 06.21 திதி : பூரணை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும். அறிஞர்கள் நிறைந்த மேடைகளில், கௌரவப் பட்டங்கள் உங்களை அலங்கரிக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆன்லைனில் ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. உறவினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குக் காரியத் தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையோடு ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லாத காரியங்களுக்காக அலைய வேண்டும். சிலருக்குக் கையிருப்பு குறைந்து பண சிக்கல்கள் ஏற்படலாம். இடுக்கண் களைய உதவும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். செய் தொழிலில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார உயர்வில் மூன்னேற்றம் ஏற்படும். பூஜை வழிபாடுகள் தடைப்பட்டு வந்த காரியங்கள் அனைத்தும் விரைவாக நடைபெறும். வெளியூர், வெளிநாட்டு பயணங்களின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கட்டுக்கு அடங்காத செலவுகளால் மன அமைதி குறையும். ஆயினும், புதுப்புது முயற்சிகளால் தனவரவு அதிகரித்து கேளிக்கை ஈடுபாடு, இனிய பயணங்கள் ஆகியவை ஏற்பட்டு சந்தோஷம் தரும். வியாபாரிகளுக்கு வியாபார சம்பந்தமான நற்செய்திகள் வரும். மக்களிடம் தங்கள் விற்பனைத் திறமைகளைக் காட்டி வியாபாரத்தில் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அரசு அதிகாரிகளின் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற இனிய சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தைத் தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில்எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். எதையும் துணிகரமாக எடுத்து மேற்கொள்ளும் தனித்திறன் உங்களிடம் இருப்பதால் வாழ்க்கையில் உச்சத்துக்குச் செல்வீர்கள். பண விஷயத்தில் திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் அதிகாரிகள் தயவால் அஅனுகூலமான பலன்களை [illegible]

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல ஆன்மிகக் கருத்துக்கள் கேட்பதின் மூலம் ஞானத்தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். சுபகாரியச் செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். புதிய தொழில் முயற்சிகள் மூலம் பண வருமானம்அதிகரிக்கும். அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நண்பர்களுடன் முக்கிய விருந்துகளில் கலந்துகொண்டு மகிழ்ச்சி பொங்கப் பொழுதைக் கழிப்பீர்கள். எல்லாவகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடமும் அரசாங்கத் திடமும் எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் தாமதமின்றி சாதக மாக நிறைவேறும். தொழிலில் புதிய விரிவாக்கம் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். மாணவர்கள் தங்கள் பாடங்களை அக்கறையுடன் படித்தாலே அதிக மதிப்பெண் பெறலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்லதும், கெட்டதுமாகக் கலந்த பலன்கள் ஏற்படும் ஆதலால் பக்தி மார்க்க ஈடுபாடு நல்லபலன் தரும். சாதிக்கத் துடிக்கும் உங்கள் கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட்டினையும் பெற்றுத் தரும். உஷ்ணம் காரணமான உபாதைகள் ஏற்படும். சம்பாதித்த பணத்தைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலமாக சேமிக்க முற்படுவீர்கள். நீண்டநாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாகப் பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும். வழக்குகளில் நிச்சியமாக வெற்றிகிடைக்கும். அக்கம் பக்கத்தில் தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைக்காதிருப்பது நல்லது. மனைவி, குழந்தைகளிடம் மனம்விட்டு சிரித்துப் பேசி மகிழுங்கள். சிலருக்கு ஏமாற்றத்திற்கான வாய்ப்புகளும்வரலாம். உங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் இலாபம் பெருகும். பலன் அளிக்கக் கூடிய இனிய பயணங்கள் பலவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங்களைத் தேடிவரும். நெருங்கிய உறவுகளை அனுசரித்துச் சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அவர்களால் பாராட்டவும் படுவீர்கள். செலவுகளைக் குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீள லாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழுக்கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத் திறன் கூடும், பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.சுபச் செய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் [illegible] தனலாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல்களை ஒன்றாக நடத்தவேண்டும்!

**றொஹான் சமரஜீவ**

மாகாணசபைகளுக்கு தங்கள் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யக்கூடியதாக கிரமமாக தேர்தல்களை நடத்துவது அரசியலமைப்பின் பிரிக்கமுடியாத முழுமைவாய்ந்த ஓர் அம்சமாகும். அத்தகைய தேர்தல்கள் போர்க்காலத்தில் படுமோசமான நிலைவரங்களுக்கு மத்தியிலும் கூட நடத்தப்பட்டன. எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றம் இணங்க முடியாமற்போன காரணத்தால் இப்போது மாகாணசபை தேர்தல்கள் ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலமாக நடத்தப்படாமல் இருக்கின்றன.

எல்லை நிர்ணயம் தொடர்பான விவகாரங்களை தீர்த்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கை 2018 ஆம் ஆண்டின் 52 நாள் அரசியலமைப்புச்சதி நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. அதற்கு பிறகு அது ஒருபோதும் பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை. மன்னிக்கமுடியாத இந்த தாமதம் மக்களின் இறைமையை பாரதூரமான முறையில் மீறிய செயலாகும். அரசியலமைப்புக் கோட்பாட்டை மதிக்கின்ற ஒரு அரசு என்று நாம் இனிமேலும் உரிமை கோர முடியாது.

2024 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவரும் இரண்டாவதாகவும் மூன்றாவதாக வந்தவர்களும் தங்களது பிரசாரங்களின்போது அரசியலமைப்புக்கான முழுமையாக நடைமுறைப் படுத்துவதாகவும் ஒத்திவைக்கப்பட்ட மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாகவும் உறுதியளித்தார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை, 13 வது திருத்தம் மற்றும் தேர்தல் முறை உட்பட அரசியலமைப்பு சீர்திருத்தங்களை முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அறிகுறி காட்டினார். ஆனால், அவர் மாகாணசபை தேர்தல்கள் குறித்து எதையும் குறிப்பிடவில்லை.

புதிய அரசியலமைப்பு ஒன்றை நிறைவேற்றுவதற்கோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது போன்ற உத்தேச மாற்றங்கள் பலவற்றைச் செய்வதற்கும் தேவையானது பாராளுமன்றத்தில் 150 வாக்குகளும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரமுமேயாகும்.

முன்னெடுக்கப்படக் கூடிய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அரசியலமைப்புக்கான 18 வது திருத்தம், 20 வது திருத்தம் மற்றும் 1972 அரசியலமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்பட்ட கதியில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கு பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளினதும் கருத்தொருமிப்பு அவசியம். தற்போதைய அரசியலமைப்பை உறுதியாகக் கடைப்பிடிப்பதன் மூலமாக நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டிருந்திக்குமேயானால், அவர்களது இணக்கத்தைப் பெறுவது எளிதாக இருக்கும்.

அரசியலமைப்பு அடிப்படையிலான ஒரு தேவையாக இல்லாவிட்டாலும் கூட, மாகாணங்களை பாதிக்கின்ற மாற்றங்கள் மாகாணசபைகளின் பங்கேற்புடன் செய்யயப்படுவதானால் நன்றாக இருக்கும். தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதனால் மாகாணசபைகள் இயங்கவில்லை. தேர்தல்களை நடத்தி மாகாணசபைகளை மீண்டும் இயங்க வைக்கவேண்டியது அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் முன்னேற்றத்துக்கு ஒரு முன்னிபந்தனையாகும்.

மாகாணசபைகளுக்கு விசேடமான விடயதானங்களை அரசியலமைப்பு பரவலாக்கம் செய்திருக்கிறது. குறிப்பிட்ட சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவற்றின் உடன்பாடு தேவை. மாகாணசபைகள் இயங்காத நிலையில் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுகின்றன.

ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக தங்களது மாகாணப் பிரதிநிதிகளை தெரிவு செய்வற்கான உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியினால் அடுத்தடுத்து நியமிக்கப்பட்ட ஆளுநர்களுடனேயே மக்கள் விவகாரங்களை கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு மாத்திரமே பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மாகாண நிருவாக த்தின் மேற்பார்வை பாதிக்கப்பட்டி ருக்கிறது.

மாகாணங்களுக்குரிய பொறுப்புக்கள் தொடர்பில் சட்டம் இயற்றப்படவில்லை. மாகாணங்களின் உடன்பாடு தேவைப்படுகின்ற மத்திய சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.




மாகாணசபை தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதற்கு வழிவகுத்த முட்டுக்கட்டையை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் தனிநபர் பிரேரணையின் வழியில் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் விரைவாக தகர்க்கமுடியும். அதற்கு பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை போதுமானது. உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று (பழைய தொகுதி - வட்டார அடிப்படையிலான முறையையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் உளட்டக்கிய) கலப்பு முறையின் மூலமே மாகாணசபை தேர்தல்களையும் நடத்துவதற்கு முயற்சிக்கப்பட்டதன் விளைவாகவே முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது).

அந்த முட்டுக்கட்டையை தகர்க்கும் நோக்கில் சுமந்திரன் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாத்திரமே மாகாணசபை தேர்தல்களை நடத்துவற்கு வழிவகுக்கக் கூடியதாக சுமந்திரன் தனிநபர் சட்டமூலம் ஒன்றுக்கான பிரேயணையை சமர்ப்பித்தார். சிறிய மாற்றங்களுடன் உயர்நீதிமன்றம் அதை அனுமதித்தது. ஆனால் ஒன்பதாவது பாராளுமன்றம் அதை அங்கீகரிக்கவில்லை.

முன்னைய தேர்தல் முறைக்கே (விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை) திரும்புவது என்பது நிரந்தரமான ஒரு பின்னோக்கிய நகர்வாகவோ அல்லது விகாதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் அவசியமான முன்னேற்றங்களைச் செய்வதில் இருந்து பின்வாங்குவதாகவோ அமையவேண்டிய தேவை இல்லை. அது பத்தாவது பாராளுமன்றம் அகல்விரிவான அரசியலமைப்புச் சீர்திருந்தங்களை நிறைவேற்றும் வரை இடைக்கால ஏற்பாடு மாத்திரமே.

மாகாணசபைகளை இயங்க அனுமதிக்கும் என்கிற அதேவேளை, புதிய தேர்தல் முறை ஒன்றுக்கு அல்லது முழுமையான புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கு கூட இணங்குவதற்கு பாராளுமன்றம் அதற்கு தேவையான போதிய கால அவகாசத்தை எடுத்துக் கொள்ள முடியும்.

நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டிருக்கும் இந்த மாகாணசபை தேர்தல்களை உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முன்னதாக அல்லது இரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது ஜனநாயகப் பற்றாக்குறையை நிரவும். ஒரே நேரத்தில் இரு தேர்தல்களையும் நடத்துவதற்கு வசதியாக 2023 உளளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் வழங்கிய 2024 ஆகஸ்ட் தீர்ப்பில் சிலவகையான தளர்வுகளுக்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதி அல்லது அவரும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் சேர்ந்து உயர்நீதிமன்றத்தை கேட்கலாம்.

உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாணசபை தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவதனால் செலவினங்களை கணிசமானளவுக்கு குறைக்கும். இரு தேர்தல்களையும் தனித்தனியாக நடத்தும்போது செலவினம் அதிகமாகும்.

இரு தேர்தல்களும் ஒரே நேரத்தில் நடத்தப்படும்போது பணம் சேமிக்கப்படுவதுடன் அரசாங்கத்தின் சகல அடுக்குகளும் பிரச்னை இல்லாமல் வழமை போன்று இயங்கக் கூடியதாகவும் இருக்கும்.

பல தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தும் நடைமுறை பல நாடுகளில் இருக்கிறது. அதே போன்று இலங்கையில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்த முடியாது என்பதற்கு காரணம் எதுவுமில்லை.

(டெய்லி மிரர்)

# மன்னார் கத்தோலிக்க சமூகத்தின் சேவைக்கு ஒரு ‘வெள்ளை ரோஜா’

**அமுது நேரு**


பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்பணி அன்ரன் ஞானப்பிரகாசம் அவர்களை நியமனம் செய்திருக்கிறார். இந்த நற்செய்தியை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ மன்னார் குருமார், கன்னியர் துறவிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் முன்னிலையில் பேராலய மணிகள் ஓங்கி ஒலிக்க அறிவிப்புச் செய்தார்.

அடம்பனைச் சேர்ந்தவரான 57 வயதான வண. ஞானப்பிரகாசம் முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் செயலாளராகவும் மடுத்திருப்பதியின் பிரதம பரிபாலன குருவாகவும் பணியாற்றியவர். ஜோசப் ஆண்கையுடன் பணியாற்றிய நாட்களில் ஆயருக்குரிய பொறூப்புக்களை நன்கு கற்று செழுமையான அனுபவத்தைக் கொண்டிருக்கிறார்.

மன்னார் கத்தோலிக்க சமூகத்தினதும் குருமாரினதும் பேரன்புக்குரியவரான வண ஞானப்பிர்காசம் ‘வெள்ளை ரோஜா’ என்று வாஞ்சையுடன் அழைக்கப்படுகிறார். போர்க்காலத்தில் மக்களோடு மக்களாக நின்று அவர்களின் துயர்துடைக்க அரும்பணியாற்றிய அவர் மடுமாதா திருப்பதிக்கு வரும் சகல இன மக்களினதும் பெருமதிப்புக்குரியவராகவும் விளங்குகிறார். அவர் புதிய ஆயராக நியமிக்கப்பட்டமை குறித்து மன்னார் கத்தோலிக்க சமூகம் மாத்திரமல்ல ஏனைய சமூகத்தவர்களும் கூட பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

வண. ஞானப்பிரகாசம் ஆயராக நியமிக்கப்பட்ட செய்தி உலகில் தமிழ் மக்கள் பரந்துவாழும் மாநகர்கள் எங்கும் எட்டியபோது தேனிலும் இனிதாக வரவேற்கப்பட்டது என்று பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க ஆன்மிக ஒன்றிய முன்னாள் தலைவர் பொறியியல் அறிஞர் உயர்திரு இராசா சுவாம்பிள்ளை தனது முகநூல் பதிவில் வாழ்த்து தெரிவித்திருக்கிறார். வண. ஞானப்பிரகாசத்தின் நியமனம் தொடர்பான செய்தி றோமில் வியாழன்னறு மதியம் வெளிப்படுத்தப்பட்டது. அந்த செய்தி லண்டன் நேரம் காலை 11 மணிக்கு கேட்டு மகிழ்ந்ததாகவும் சுவாம்பிள்ளை தனது பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

மடுத்திருப்பதியின பிரதம பரிபாலன குருவாக அரிய பணிபுரியும் வண. ஞானப்பிரகாசம் அந்த திருப்பதிக்கு யாத்திரை செல்லும் தமிழ், சிங்கள, சைவ, பௌத்த, இஸ்லாமிய மக்கள் அனைவரையும் மிக்க அன்போடு இன்முகத்துடன் வரவேற்று ஆசீர்வதிக்கும் ஓர் அற்புதத் துறவி. இவரின் ஆயர்பணி நியமனத்தை மன்னாரிலும் கொழும்பு, காலி, குருநாகல், யாழ்ப்பாணம் என்று இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள ஆயர்கள், குருமார், கன்னியர் துறவிகள் ஆரவாரத்துடன் வரவேற்றிருக்கிறார்கள் என்பதை சமூக ஊடகங்களில் நிரம்பி வழியும் பல்லாயிரம் பாராட்டுக்கள் மூலமாக அறிய முடிகிறது.



உலகத்தமிழர்கள் அதியுயர்வாக போற்றிவரும் மறைந்த மாமனிதர் மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் செயலாளராக, அவரின் வலதுகரம் போன்று மிகவும் ஆபத்து மிகுந்த போர்க்காலத்தில் அருட்பணி ஞானப்பிரகாசம் பல ஆண்டுகள் பணியாற்றிய பட்டனுபவத்தைக் கொண்டவர். ஆயர் பணி மலிவான புகழுக்கும் பகட்டான வாழ்வுக்குமான பட்டிக்கட்டு அல்ல என்பதை உணர்த்தி இலங்கையின் ஆயர்களுக்கு ஒரு முன்னோடியாக வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்தவர் பேராயர் இராயப்பு ஜோசப். இன்று உலகெங்கும் வாழும் தமிழச் சமூகம் அவரை மதித்துப் போற்றுகிறது.

அவரைப் போன்றே வண. ஞானப்பிரகாசம் அவர்களும் பதவிப்பற்று இல்லாத ஒரு பெருந்துறவியாக ஆயர்கள் அனைவருக்கும் மக்கள் பணியே மகேசன் பணி என தனது சேவைகள் மூலம் வழிகாட்டுவார் என்று பாராட்டுகளும் வாழ்த்துக்களும் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

உலகமே பாராட்டும் வகையில் அரசியல் செல்நெறிகளை மாற்றி எளிமையான தேச நேசத்துடன் மக்களுக்கு பணியாற்றும் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அவர்களைப் போன்று அருட்பணி ஞானப்பிரகாசம் இலங்கையின் அனைத்து மக்களாலும் ஏகோபித்த ஆர்வத்துடனும் வியக்கத்தக்க விருப்பத்துடனும் ஒருமித்த ஒத்துழைப்புடனும் வரவேற்கப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்திடம் இருந்து ஆதரவை பெறுதல்



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி அநுரா குமார திஸநாயக்க அடுத்த வாரம் தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்தியாவுக்கு செல்லவிருக்கிறார். இதை தொடர்ந்து அவர் விரைவாகவே சீனாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியும் நாடும் ஆசியாவின் இரு பெரிய நாடுகளுக்கு இடையில் கயிற்றில் நடப்பது போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு நாடு உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தையும் மற்றையது ஐந்தாவது பெரிய பொருளாதாரத்தையும் கொண்டவையாக இருக்கின்றன.





இரு நாடுகளுமே இலங்கையை அவற்றின் புவிசார் அரசியல் நோக்கங்களுக்கான மூலோபாய அமைவிடமாக நோக்குகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை, தெற்கில் அதற்கு சீனாவிடமிருந்து இராணுவச் சவால் ஒன்று வருவதை விரும்பவில்லை என்பதால் அதன் நலன்கள் உயர் அளவானவையாக இருக்கின்றன. வடக்கில் இரு நாடுகளும் ஏட்டிக்கு போட்டியாக நிலப் பிராந்தியங்களுக்கு உரிமைகோருவதன் காரணமாக போருக்கும் சென்றன.

ஜனாதிபதி மேற்கொள்ளவிருக்கின்ற இரு விஜயங்களையும் பொருளாதார முதலீடுகளுடன் தொடர்புபட்டவையாக காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. உண்மையில், இரு நாடுகளுமே இலங்கையின் எதிர்கால சுபிட்சத்துக்கு முக்கியமானவை. இலங்கையின் உற்பத்தித் துறைகளில் இரு நாடுகளுமே முதலீடுகளைச் செய்யுமானால், இலங்கை அதன் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களைக் கொடுக்கவும் தொழில் வாய்ப்புகளுக்காக இலங்கையர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளுக்கு படையெடுப்பதை தடுக்கவும் கூடியதாக இருக்கும்.

வெளிநாட்டு முதலீடுகளின் விளைவாக பொருளாதார உற்பத்தி அதிகரித்தால், வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் சுமையை குறைக்கவும் முடியும். ஊழல்தனமான முறையில் பயன்படுத்தப்படுகின்ற கடன்கள் பொருளாதாரத் தொழில்துறைகளில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பதிலீடாகாது.

பொருளாதார வங்குரோத்து நிலைக்கு பிறகு பொருளாதார உறுதிப்பாட்டை ஓரளவுக்கேனும் நிலையுறுதிப்படுத்த உதவிய நாடுகளுக்கு இடையில் முன்னுரிமை கொடுப்பதில் இலங்கை இதுவரையில் கயிற்றில் நடப்பதைப் போன்றே செயற்பட்டுவருகின்றது. 2022 ஆண்டில் பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் அவசர உதவிகளை வழங்குவதில் இந்தியா வகித்த பாத்திர த்தை மறக்க முடியாது. அதற்கு பிறகு இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை ஏற்றுக்கொண்டது. புதிய அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. கடந்த காலத்தில், ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே வி.பி.) தலைவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளை எதிர்த்தனர். அத்துடன் அவர்கள் நாட்டின் சுயாதிபத்தியத்தை பாது காக்கும் விவகாரங்களில் ஐக்கிய நாடுக ளுக்கு விட்டுக்கொடுப்தையும் எதிர்த்தார்கள்.

கடந்த காலத்தில் தங்களின் தலைவர்கள் எடுத்த நிலைப்பாடுகளுக்கு இசைவானவையாக இல்லாவிட்டாலும் கூட, நாட்டின் நலன்களுக்கு அவசியமானவற்றை செய்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவார்ந்த முறையில் நடந்து கொள்வது மிகவும் நேர்மறையான அம்சமாகும். இதை சர்வதேச நாணய நிதியத்துடனான உடன் படிக்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் ஆணைக்குழுவுடனான அணுகு முறை மற்றும் இனங்களுக்கு இடையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விவ காரங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் டொனால்ட் லூவின் இலங்கை விஜயம் மிகவும் சுமுகமானதாக அமைந்தது. ஊழலுக்கு எதிரான இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்காவின் தடுமாற்றமில்லாத ஆதரவு கிடைக்கும் என்று டொனால்ட் லூ உறுதியதித்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு கூறியது. இலங்கையின் பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு அமெரிக்கா தயாராயிருப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

இலங்கையின் ஊழல் தடுப்பு செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக, நாட்டில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட பணத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பத்தையும் அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் வெளியிட்டார். "முக்கியமான அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் புதிய நிருவாகம் காண்பிக்கும் அக்கறையை அமெரிக்க அரசாங்கம் மெச்சுவதை டொனால்ட் லூவுடனான பேச்சுவார்த்தையின் போது காணக்கூடியதாக இருந்தது" என்று அரசாங்கம் கூறியது. இது சந்திப்பு தொடர்பில் அரசாங்கம் கொண்டிருக்கும் நேர்மறையான விளக்கப் பாட்டை உணர்த்துகிறது.

2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்க உயர் மட்டங்களில் நிலவிய ஊழலே காரணம் என்ற நம்பிக்கையே அறகலய மக்கள் இயக்கத்தின் பின்னணியில் இருந்த இயக்கு சக்தியாகும். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அன்றைய அரசாங்கம் கொண்டிருந்த போதிலும், அதை மக்கள் இயக்கம் அதிகாரத்தில் இருந்து விரட்டியது.

உயர் மட்டங்களில் நிலவிய ஊழல் என்ற தீங்கு ஒழிக்கப் படவேண்டும் என்பதே இனம், மதம் மற்றும் வர்க்க வேறுபாடுகள் என்று சகல பிளவுகளையும் கடந்து நாட்டில் காணக்கூடியதாக இருந்த கருத்தொருமிப்பாகும். இந்த பிரச்சினையை கையாளுவதாக உறுதியளித்த போதிலும் கூட முன்னைய அரசாங்கங்கள் அதைச் செய்யத் தவறின. அரசியல் துணிச்சல் இல்லாதமையே அதற்கு காரணமாகும். ஊழலுக்கு அரசாங்க உயர் மட்டத்தில் இருந்தவர்களும் உடந்தையாக இருந்ததே துரதிர்ஷ்டவசமான யதார்த்தமாகும்.

> ஊழல் போன்ற விடயங்களில் சர்வதேச உதவிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கமுடியும் என்கிற அதேவேளை பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் இணையவெளி பாதுகாப்பு சட்டம் போன்ற சட்டங்களைப் பதிலீடு செய்வது போன்ற விடயங்களில் மிகவும் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் கருத்தொருமிப்பை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், அதன் முன்னணி தலைவர்கள் அவர்களின் கோட்பாட்டு நம்பிக்கைகள் மற்றும் எளிமையான வாழ்க்கைமுறை காரணமாக ஊழலுக்கு உடந்தையாக இருந்ததில்லை. அவர்கள் அதிகாரப் பதவிகளை வகித்து பரீட்சித்துப் பார்க்கப்பட்டதில்லை. அத்துடன் அவர்கள் ஊழல்தனமானவர்கள் என்று நம்பப்பட்டவர்களுடன் தனிப்பட்ட உறவு முறைகளைக் கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை.

ஊழல் இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் உறுதிப்பாடும் அந்த உறுதிப்பாட்டில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் ஊழல் பிரச்சினையை கையாளுவதற்கு அமெரிக்கா வழங்க முனவந்த உதவியை ஏற்றுக்கொள்வதற்கு நாட்டுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்தது. அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கின்ற நவீன எண்ம பொருளாதாரம் ஊழலை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த சாத்தியப்பாட்டை வழங்குகிறது. கேள்விப் பத்திரங்களை கோருதல் போன்ற செயற்பாடுகளை பொது இணையத் தளத்தில் வெளியிடுவதன் மூலம் ஊழலுக்கு இடமில்லாமல் செய்யமுடியும்.

கொள்வனவு நடைமுறைகளில் ஊழலைக் கண்டுபிடிப்பது தொடர்பில் ஆய்வு ஒன்றை "வெறைற் றிசேர்ச்" சிவில் சமூக சிந்தனைக் குழாம் தற்போது நிறைவு செய்து கொண்டிருக்கிறது. ஒளிவுமறைவற்ற முறையில் போட்டிக் கேள்விப்பத்திர நடைமுறையைப் பின்பற்றாமல், கோரப்படாமலே முன்வைக்கப்படுகின்ற திட்ட யோசனைகளும் ஊழல்தனமான ஒப்பந்தங்களுமே நாட்டுக்கு கோடிக்கணக்கான நட்டத்தை ஏற்படுத்திய, தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற படுமோசமான ஊழல் வடிவங்களாகும்.

கடந்த கால ஊழல் மற்றும் ஊதாரித்தனத்தின் விளைவாக பொருளாதார வளங்கள் இல்லாமல் இருப்பதே தற்போதைய தருணத்தில் அரசாங்கத்தின் வெற்றிக்கு இருக்கின்ற பிரதான நிர்ப்பந்த நிலையாகும். மிலெனியம் சவால் கோர்ப்பரேசனின் கீழ் நாட்டின் வீதி மற்றும் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா வழங்க முன்வந்த 450 மில்லியன் டொலர்கள் நன்கொடையையும் இலகு ரயில் போக்குவரத்து முறையை அயைப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் ஜப்பான் வழங்க முன்வந்த 1.2 பில்லியன் டொலர்களையும் கடனுதவியையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கீழான முன்னைய அரசாங்கம் நிராகரிக்கத் தீர்மானித்தற்கான காரண அடிப்படையை விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

அந்த உதவிகள் தற்போதைய சந்தர்ப்பத்தில் தவறவிடப்பட்டவையாக தோன்றுகின்ற போதிலும், அவற்றைப் பெறுவதற்கு புதிய அரசாங்கம் இரண்டாவது தடவை முயற்சித்துப் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது. இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடமும் கடல் போக்குவரத்து வழிகளில் அதன் முக்கியத்துவமும் நாட்டுக்கு நேர்மறையான பயன்களை பெற்றுக்கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன.

தனது இலங்கை விஜயத்தின்போது அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் டொனால்ட் லூ ஊழல் தடுப்பு முறைமை என்ற வடிவில் வழங்குவதற்கு முன்வந்த ஒரு வேறுபட்ட முறையிலான நிதியுதவி அரசாங்கம் தற்போது இழந்த மில்லியன் கணக்கான வருவாயை பெற்றுத்தருவதற்கு உதவ முடியும். முறையாக அறவிடப்படாத வரிகளையும் சுங்க வருவாய்களையும் ஒழுங்காத திரட்டினால் பெறுமதிசேர் வரி (வற் ) போன்ற அநீதியான வரிகளின் விளைவாக மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சுமைகளை குறைக்க முடியும். வற் போன்றவை அறவிடுவதற்கு இலகுவானவையாக இருக்கின்ற போதிலும், சமுதாயத்தின் வறிய பிரிவினருக்கு அவற்றினால் பெரும் கஷ்டம் நேருகிறது.

பொருளாதாரத் தகுதியின் அடிப்படையிலும் ஊழல் இல்லாத முறையிலும் ஒப்பந்தங்கள் வழங்கப்படுமாக இருந்தால் செலவுகளை பெருமளக்கு சுருக்கிக்கொள்ள முடியும் என்பதுடன் வருவாயையும் பெருக்க முடியும். சர்வதேச சமூகத்தின் ஆதரிக்கக்கூடிய ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை சுயநல சக்திகள் எதிர்க்கும் என்றபோதிலும்,


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளை பயன்படுத்துவதை நிறுத்தினால் மாத்திரமே பாக்குநீரிணையில் மீனவர் பிரச்னைக்கு தீர்வைக் காணமுடியும்



மீரா ஸ்ரீனிவாசன்



## ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு முன்னதாக கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தல்

இழுவைப்படகுகளை பயன்படுத்துவதை நிறுத்தினால் மாத்திரமே இலங்கையின் வடபகுதி மீனவர்களையும் தமிழ்நாட்டின் தினச்சம்பள மீனவர்களையும் பெரிதும் பாதிக்கின்ற நீண்டகால பாக்குநீரிணை மீன்பிடி நெருக்கடிக்கு தீர்க்கமான முடிவைக் காணக் கூடியதாக இருக்கும் என்று இலங்கையின் கடற்தொழில், நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கூறினார்.

இந்த மீன்பிடி நெருக்கடி பல வருடங்களாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முக்கியமான ஒரு இராஜதந்திர பிரச்சினையாக நீடித்துவருகிறது. அடுத்தவாரம் இலங்கை ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தின்போது இந்த பிரச்சினை ஆராயப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட சகல இனங்களையும் சகல பிராந்தியங்களையும் சேர்ந்த மக்கள் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் எங்களுக்கு ( தேசிய மக்கள் சக்திக்கு ) ஒரு பெரிய ஆணையைத் தந்திருக்கிறார்கள். அவர்களது அக்கறைகளை கவனித்து தீர்வு காண வேண்டிய ஒரு பொறுப்பு எமக்கு இருக்கிறது" என்று வடக்கு யாழ்ப்பாண மாவட்டத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் சந்திரசேகர் கூறினார்.

"தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையில் இழுவைப்படகுகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதன் விளைவான நீண்டகாலப் பிரச்னை எமது வடபகுதி மீனவர் சமூகத்தின் முக்கியமான கவலையாக இருந்துவருகிறது" என்று புதன்கிழமை 'த இந்து' வுக்கு அவர் கூறினார்.

"இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது நவீன தொழில்நுட்பத்தையும் நிலைபேறான வழிமுறைகளையும் பயன்படுத்தி இலங்கையின் மீன் உற்பத்தியை மேம்படுத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் விரிவான திட்டங்களின் ஒரு பகுதியாகும்" என்றும் சந்திரசேகர் கூறினார்.

2017 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆள்வீத மீன் நுகர்வளவு 17.2 கிலோவாக இருந்தது. தற்போது அது 11.07 கிலோவாக குறைந்துவிட்டது. இது மக்கள் புரதச்சத்தை உட்கொள்ளும் அளவின் வீழ்ச்சியை பிரதிபலிக்கிறது என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2022 பொருளாதார நெருக்கடிக்கு பிறகு மந்தபோசாக்கு தீவிர கவனத்துக்குள்ளாகியிருக்கிறது.

"மக்கள் போதியளவு ஊட்டச்சத்தைப் பெறுவதை உறுதிசெயவதற்கு நாம் கடலுணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக நாம் எமது கடல் வளத்தையும் கடல்சார் உயிரின பல்வகைமையையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது" என்று அமைச்சர் கூறினார்.

**கெடுதியான வழிமுறை**

விரைவாக குறைந்து கொண்டு போகும் மீன்வளத்துக்கு மத்தியில் வாழ்வாதாரங்கள்ளுக்கான போட்டா போட்டியே பாக்குநீரிணையில் இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையிலான முரண்நிலைக்கு பெரிதும் காரணமாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்பிராந்தியங்களை இரு தரப்பும் இணங்கிக் கொண்ட ஒரு கற்பனையான கடல் எல்லை பிரிக்கின்ற அதேவேளை, இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதே பிரச்சினையின் அடிப்படையாகும் என்று வட இலங்கை மீனவர்கள் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டி வருகிறார்கள்.

இழுவைப்படகுகள் பெருமளவு மீனையும் இறால்வகைகளையும் பிடிப்பதை இலக்காகக் கொண்டிருக்கின்ற அதேவேளை பெரிய வலைகள் மூலமாக கடல் படுக்கையில் இருந்து குஞ்சு மீன்களையும் முட்டைகளையும் கடல் தாவரங்களையும் வாரிக்கொண்டு வருகின்றன. பல தசாப்தங்களாக தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு கரையோர மாநிலங்களைச் சேர்ந்த மீனவர்கள் இழுவைப்படகுகளை பயன்படுத்தி வருகிறார்கள். அதனால் இந்தியாவின் கடலுணவு ஏற்றுமதி அதிகரித்ததுடன் பெரும் இலாபமும் கிடைத்தது.

2016 ஆம் ஆண்டில் இந்த பிரச்னை இருதரப்பு சந்திப்பு ஒன்றில் ஆராய்ந்த பிறகு இந்தியாவும் இலங்கையும் கூட்டு செயற்பாட்டுக் குழு (Joint Working Group ) ஒன்று அமைத்தன. அந்த குழு பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட வேறு பல விடயங்களுக்கு மத்தியில் சாத்தியமானளவு விரைவாக இழுவைப்படகு நடைமுறையை முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கியும் செயற்படுவதற்கு இணங்கிக்கொண்டது. ஆனால், இழுவைப் படகுகளை பயன்படுத்தும் நடைமுறை தொடரவே செய்தது என்று இலங்கையின் வடபகுதி கரையோரமாக வாழும் மீனவர்கள் தொடர்ந்து முறைப்பாடு செய்து வருகிறார்கள்.

இந்த மீனவர்கள் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த இலங்கையின் உள்நாட்டுப் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள். போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட போதிலும் வடபகுதி மீனவர்கள் தங்களது வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்ப இயலாதவர்களாக இருக்கிறார்கள். அதற்கு பிரதான காரணம் இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளை பயன்படுத்துவதன் விவைவான பாதிப்புக்களேயாகும்.

2017 ஆம் ஆண்டில் இழுவைப் படகுகளை பயன்படுத்துவதை தடை செய்த இலங்கை 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டு படகுகளுக்கு கடுமையான அபராதங்களை விதித்தது. இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் இலங்கையின் வடபகுதி மீனவர்களினால் இடையறாது கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் இந்த கெடுதியான மீன்பிடிமுறையை இன்னமும் கைவிடவில்லை.

மறுபுறத்தில், இழுவைப்படகுகளின் உரிமையாளர்களினால் தினச் சம்பளத்துக்கு வேலைக்கு அமர்த்தப்படும் தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டதான குறறச்சாட்டில் அடிக்கடி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டில் இதுவரையில் இலங்கை கடற்படையினரால் கைதான மீனவர்களின் எண்ணிக்கை 530 க்கும் அதிகமாகும். கடந்த வருடத்தில் கைதானவர்களின் எண்ணிக்கையையும் விட இது இரு மடங்குக்கும் அதிகமாகும். 400 க்கும் அதிகமானவர்கள் விடுதலை செய்யப்பட்டு தமிழ்நாட்டுக்கு திருப்பியனுப்பப்பட்டதாக உத்தியோகபூர்வ தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

கடந்த புதன்கிழமை அமைச்சர் சந்திரசேகரை அவரது அலுவலகத்தில் சந்தித்த கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா "மீனவர் பிரச்சினைக்கு தீராவுகாண்பதில் மனிதாபிமான அடிப்படையிலானதும் பயனுறுதியுடையதுமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை" வலியுறுத்தினார். எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவொன்றைச் செய்த உயர்ஸ்தானிகர் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மீனவர்கள் விரைவாக விடுவிக்கப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

2022 பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா செய்த தருணமறிந்த முக்கியமான உதவியை இலங்கை பெரிதாக மதிக்கிறது. இந்தியாவுடனான உறவுகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி திசாநாயக்கவின் அரசாங்கம் உயர்வாக மதிக்கிறது என்று அமைச்சர் சந்திரசேகர் கூறினார்.

"இந்தியா இலங்கையின் நெருங்கிய அயல்நாடும் முக்கியமான அபிவிருத்தி பங்காளியும் மாத்திரமல்ல, பொதுவான வரலாற்று ரீதியான கலாசார உறவுகளையும் கொண்ட நாடுமாகும். எமது மூதாதையர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள்" என்று இலங்கையின் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களினால் தமிழகத்தில் இருந்து இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு கூட்டி வரப்பட்ட தமிழ்ச் சமூகத்தை (மலையக தமிழர்கள் ) சேர்ந்தவரான சந்திரசேகரன் கூறினார்.

"எங்களில் பலருக்கு இன்னமும் கூட தமிழ்நாட்டில் குடும்பப் பிணைப்புகள் இருக்கின்றன" என்று கூறிய அவர் மீனவர் பிரச்சினையை பரந்த நோக்கோடு அணுகுமாறு இந்திய அரசாங்கத்திடமும் தமிழ்நாடு அரசாங்கத்திடமும் மக்களிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

"மீனவர் பிரச்சினையை தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் இலங்கை கடற்படைக்கும் இடையிலான ஒன்றாக நோக்கும் மனப்பாங்கு ஒன்று இருக்கிறது..... ஆனால், இழுவைப்படகு மூலமான மீன்பிடி போரின்போது சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து பெரும் இழப்புகளைச் சந்தித்த இலங்கையின் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரங்களை படுமோசமாப் பாதித்திருக்கிறது என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் " என்று அமைச்சர் சந்திரசேகரன் கூறினார். ( த இந்து )

> **"மீன்பிடி நெருக்கடி பல வருடங்களாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முக்கியமான ஒரு இராஜதந்திர பிரச்சினையாக நீடித்துவருகிறது. அடுத்தவாரம் இலங்கை ஜனாதிபதி அநுராகுமார திசாநாயக்க இந்தியா வுக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தின்போது இந்த பிரச்னை ஆராயப் படக் கூடிய சாத்தியம் இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தச்சட்டத்தின் எதிர்காலம்?



யதீந்திரா


எழுத வேண்டும் என்னும் ஆர்வம் முன்னரைப் போல் இல்லை. எழுத வேண்டும் என்று எண்ணும் போதெல்லாம் எதனை எழுதுவது என்னும் ஒரு கேள்வி சங்கடப்படுத்துகின்றது - அதனையும் மீறி எழுத ஆரம்பித்தால் எவர் இவற்றையெல்லாம் பொருட்படுத்தப் போகின்றார்? - என்னும் இன்னொரு கேள்வி குறுக்கிடுகின்றது - ஏனெனில், ஏராளம் எழுதியாகிவிட்டது - பேசியாகிவிட்டது ஆனால் நிலைமை மட்டும் அப்படியே எந்தவொரு அசைவும் இல்லாமல் இருக்கின்றது. கூறியது கூறலைத் தவிர்த்து ஒரு உரையாடலை தமிழ் அரசியலில் செய்ய முடியுமா என்றால் நிச்சயம் முடியாது. ஏனெனில், விடயங்கள் மாற்றமின்றி இருக்கின்ற போது - முன்னர் பேசிய விடயங்களைத் தவிர வேறு எதனைப் பேசுவது? இந்தச் சங்கடத்தின் காரணமாகவே எழுதுவதன் மீதான ஆர்வம் குறைந்து கொண்டு செல்கின்றது. அரசியலை விடுத்து வேறு விடயங்கள் தொடர்பில் எழுதினால் என்ன - ஆகக் குறைந்தது ஒரு ஆத்ம திருப்தியாவது கிட்டும் அல்லவா - இப்படித்தான் எண்ணங்கள் எழுகின்றன.

புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்கள் சொல்கின்ற போது, எழுதும் போது, உங்களைச் சுற்றியுள்ள ஆச்சரியமான விடங்களை கவனியுங்கள் என்று கூறுகின்றனர். நானும் சற்று தலையில் கைவைத்தவாறு சில மணித்துளிகள் யோசித்துப் பார்த்தேன். அப்படியென்ன ஆச்சரியமான விடயங்கள் நம்மைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. தமிழர் அரசியலில் ஓர் ஆச்சரியமும் நிகழவில்லை. சில கட்சிகள் சில சொற்களுடன் இருப்பதைத் தவிர வேறு எதனையும் காண முடியவில்லை. ஆனால் இலங்கைத் தீவில் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்துதான் இருக்கின்றது.

இலங்கையின் முதலாவது அரச எதிர்ப்பு ஆயுதக் கிளர்ச்சி அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இலங்கையின் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக சிகப்பு பெடியன்கள் (Red boys) என்று அழைக்கப்பட்ட இடதுசாரித்துவ பின்னணிகொண்ட ஒரு கட்சி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. கொழும்பின் அரசியல் உயர் அடுக்கினர் முதல் முறையாக அதிகாரத்திற்கு வெளியில் நிற்கின்றனர். ஜே.வி.பியினரின் அடைகாத்து வைத்திருந்த அறுபது வருட கால இச்சை ஈடேறியிருக்கின்றது.

1971இலும், 1987-1989இலும் ஆயுதங்கள் மூலம் அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் தோல்வியுற்றதன் பின்னர், சிறிது காலம் ஜே.வி.பி என்னும் நாமம் இலங்கையின் அரசியலில் இல்லாமல் போயிருந்தது. ஆனால் அவர்களுக்குள் அடைகாத்த அதிகாரத்தை கைப்பற்றும் இச்சை அவர்களை இயக்கியது. ஜே.வி.பி பற்றி எவ்வாறான அரசியல் விமர்சனங்களையும் முன்வைக்கலாம் - தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் அவர்களின் பார்வை தொடர்பில் கேள்வியுண்டு - ஆனால், அவர்களது வளர்ச்சியை நாம் பாராட்டத்தான் வேண்டும். முடிந்தால் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வோம் - பொதுவாக நாங்கள் கற்றுக்கொள்ளவே கூடாதென்று அடம்பிடிக்கும் ஒரு இனக் கூட்டம்தான் இருந்தாலும் ஒரு நட்பாசையில் கூறுகின்றேன். நம்மிடமும் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, 1990களில் ஜனநாயக நீரோட்டத்துடன் இணைந்து கொண்ட கட்சிகள் பல இருக்கின்றன. அவர்களின் இன்றைய நிலை என்ன என்பதைப் பற்றி நான் கூறி, நீங்கள் அறிய வேண்டியதில்லை.

கட்டுரையின் தலைப்பு என்ன - நீங்கள் பேசிக்கொண்டிருப்பது என்ன? இப்படியொரு கேள்வி உங்களுக்குள் எழலாம். இலங்கைத் தீவில் நிகழ்ந்திருக்கும் ஆச்சரியத்திற்கும் இந்தக் கட்டுரையின் தலைப்பிற்கும் ஒரு தொடர்புண்டு. இலங்கை அரசியல் வரலாற்றில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கருத்தியல் தளத்தில் எதிர்த்த ஒரேயொரு அமைப்பு என்றால் அது ஜே.வி.பி



மட்டும்தான். விடுதலைப் புலிகளும் இந்திய அமைதிப் படையை எதிர்த்து சண்டையிட்டனர் ஆனால் விடுதலைப் புலிகளின் இந்திய எதிர்ப்பிற்கு பின்னால் இருந்தது ஒரு தெளிவான கருத்தியல் அல்ல. விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையை சாத்தானின் படைகள் என்றும் பிரச்சாரப்படுத்தினர் ஆனால் விடுதலைப் புலிகளின் ஒரே நோக்கம் இந்திய அமைதிப் படையை வெளியேற்ற வேண்டும் ஏனெனில் அவர்கள் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு - முக்கியமாக அதன் தலைவர் பிரபாகரன் இருக்க முடியாது. இதன் காரணமாகவே பிரேமதாச - பிரபாகரன் பின்கதவு உறவு மலர்ந்தது. இந்திய படைகளை எதிர்த்து சண்டையிடுவதற்கான ஆயுத உதவிகளையும் பிரேமதாச செய்திருந்தார். விடுதலைப் புலிகளின் இந்திய எதிர்ப்பின் பின்னணி குறித்து பிற்காலத்தில் அன்ரன் பாலசிங்கம் பதிவு செய்திருக்கின்றார்.

ஆனால் ரோகண விஜயவீர தலைமையிலான ஜே.வி.பி ஒரு தெளிவான சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே இந்தியாவை எதிர்த்தது. ஜே.வி.பி அதன் ஆயுதக் கிளர்ச்சிக்கான அணிதிரட்டலை ஐந்து வகுப்புக்களின் அடிப்படையிலேயே முன்னெடுத்தது. மிகவும் குறுகிய காலத்தில் பெருந்தொகையான கிராமப்புற இளைஞர்களை அணிதிரட்டியது. இந்தியா ஒரு விரிவாக்கல் சக்தி - அது இலங்கையை கபளிகரம் செய்யப் போகின்றது என்பதும் ஐந்து வகுப்புக்களில் ஒன்று. றோகண விஜயவீரவின் பார்வையில் இந்தியாா ஒரு கொடுமைப்படுத்தும் அரசு - அதன் பின்காலனித்துவ தேசக்கட்டுமானம் என்பது, அயல்நாடுகளின் தேசிய நலன்களை சிதைத்து, தங்களுக்குள் அடக்குவதாகும்.

இந்தப் பின்னணியில்தான் 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஜே.வி.பி கொள்கைரீதியாக எதிர்த்தது. ஆனால் விடுதலைப் புலிகள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இந்த அடிப்படையில் எதிர்க்கவில்லை - உண்மையில் பிரபாகரன் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்க்கவேயில்லை - மாறாக, தாங்கள் எதிர்பார்த்த விடயங்கள் நடக்காத போது - தங்களின் அனைத்து விருப்பங்களுக்கும் இந்தியா இணக்கவில்லை என்னும் கோபத்தின் வெளிப்பாடே பிரபாவின் இந்திய எதிர்ப்பு. பிரபாகரன் இந்தியாவின் பயிற்சி மற்றும் நிதியுதவிகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டார். இந்திய உளவுத் துறையின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் பயிற்சியில் புலி உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்வதற்காக தான் எப்படியெல்லாம் பணிபுரிந்தேன் என்பதைப் பற்றி அன்ரன் பாலசிங்கம் தன்னுடைய போரும் சாமாதானமும் நூலில் விபரித்திருக்கின்றார். இந்த இடத்தில்தான் ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு முற்றிலும் வேறுபடுகின்றது.

1987- 1989 வரையிலான ஜே.பியின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியானது, முற்றிலும் இந்திய எதிர்ப்பை முன்னிலைப்படுத்தியே முன்னெடுக்கப்பட்டது. ஒரு புறம் அரச எதிர்ப்பு மறுபுறும் இந்திய எதிர்ப்பு ஆனால் மறுபுறும் விடுதலைப் புலிகளோ பிரேமதாச நண்பன் ஆனால் இந்தியா எதிரி என்னுமடிப்படையிலேயே தங்களது இந்திய எதிர்ப்பை திட்டமிட்டனர். பிரேமதாசவின் நரிக் கணக்கோ வேறு - அதாவது, எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் வகையில் விடுதலைப் புலிகளை அரவணைத்து ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல், இந்திய படைகளும் வெளியேற வேண்டும் அதே வேளை ஜே.வி.பியின் கிளர்ச்சியும் முறியடிக்கப்பட வேண்டும்.

ஜே.வி.பி ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த பின்னரும் கூட, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தல் என்னும் விடயத்தை கைவிடவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மையக் கருவாக இருப்பது அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம்தான். ஆனால் நமது சூழலில் சிலரோ, இந்திய-இலங்கை ஒப்பந்தம் வேறு 13வது திருத்தச்சட்டம் வேறு என்று வாதிடுகின்றனர். மேலோட் டமாகப் பார்த்தால் இது சரி போல்தான் தெரியும். ஆனால் சரியா என்பதுதான் கேள்வி?

ஏனெனில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னால் இந்தியாவின் நலன் சார்ந்த காரணங்கள் இருந்தாலும் கூட, தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதே ஒப்பந்தத்தின் அடிப்படையான நோக்கமாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் காணப்பட்ட தீர்வுதான் அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம். இந்தத் திருத்தச் சட்டத்தில் என்ன இருக்கின்றது - என்ன இல்லை என்பதெல்லாம் பேசி முடிந்து போன விடயம். ஆனால் சிங்கள - கடும்போக்கு தேசியவாத தரப்புக்களைப் பொறுத்தவரையில் 13வது திருத்தம் அதிகம் - அதனை இல்லாதொழிக்க வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து இதுதான் அவர்களின் ஒரேயொரு அரசியல் விருப்பமாக இருந்துவருகின்றது. அண்மையில் ஜே.வி.பின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, மாகாண சபை முறைமையால் நாட்டுக்குப் பயனில்லை எனினும் புதிய அரசியல் யாப்பு வரும்வரையில் அது நடைமுறையிலிருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். மாகாண சபை ஒரு தேவையற்ற விடயம், அது ஊழல்களுக்கும் தேவையற்ற செலவீனங்களுக்கும் வழிவகுக்கின்றது என்பதுதான் கோட்டபாயவின் கருத்தாகவும் இருந்தது. 13வது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்க வேண்டும் என்னும் ஒரே நோக்கத்தின் அடிப்படையில்தான், கோட்டபாய ஒரு புதிய யாப்பை கொண்டுவர முயன்றார்.

இந்தப் பின்னணியில் சிந்தித்தால் அரசியலமைப்பின் 13வது திருத்தத்திற்கு என்ன நடக்கும். புதிய அரசியல் யாப்பு வந்தால் அதன் பின்னர் 13வது திருத்தம் என்பது இலங்கை அரசியலில் இருக்காது. ஆனால் கேள்வி - தமிழருக்கான தீர்விற்கு என்ன நடக்கும். 13வது திருத்தத்தை இல்லாமலாக்கி, அதற்கு பதிலாக அதிக அதிகாரங்கள் வருமாயின் அது மகிழ்ச்சி ஆனால் 13வது திருத்தமே அதிகம் என்னும் நிலையில் அதனை விடவும் அதிகம் எவ்வாறு வர முடியும்? இந்த அடிப்படையில்தான் 13வது திருத்தத்தை உச்சபட்சமாக கையாள வேண்டும் என்றும், அதனை எதிர்க்கக் கூடாது என்றும் இந்தக் கட்டுரையாளர் தொடர்ந்தும் கூறிவந்திருக்கின்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படி, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுதான் அடிப்படையானது. ஒப்பந்தத்தின் 2.16(இ) பிரிவு, இவ்வாறு வரையறுத்திருக்கின்றது. அதாவது, வடக்கு கிழக்கில் வாழ்ந்துவரும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்பட வேண்டிய பொறுப்பு இலங்கை அரசிற்கும் இந்திய அரசிற்கும் உண்டு. அவ்வாறானதொரு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில்தான் அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம் உள்வாங்கப்பட்டது. இந்த நிலையில், 13வது திருத்தச்சட்டம், அதனடிப்படையிலான மாகாண சபை முறைமையும் ஒரு தரப்பான இலங்கையினால் இல்லாமாலாக்க - அல்லது பலவீனப்படுத்தப் பட்டால், அதில் தலையீடு செய்ய வேண்டியது இந்தியாவின் கடமையாகும். இந்த - இலங்கை ஒப்பந்தம் அதற்கான உரிமையை வழங்கியிருக்கின்றது. இந்த இடம் ஒன்றுதான் ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக இருக்கின்ற ஒரேயொரு வாய்ப்பாகும்.

இதனைவிடுத்து, எங்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும், எங்களுக்கு சமஸ்டி வேண்டும் என்று வழமைபோல் சொற்களுடன் சீவித்துக் கொண்டிருந்தால், எவ்வாறு விடுதலைப் புலிகளை கையாண்டு, இந்திய படைகளை வெளியேற்றுவதில் பிரேமதாச வெற்றி பெற்றாரோ, அதுதான், 13வது திருத்தச்சட்ட விவகாரத்திலும் நடக்கும். தமிழ்களுக்கும் தேவையில்லை என்று கூறும் ஒன்றை நாங்கள் எதற்காக வைத்திருக்க வேண்டும் என்னும் வாதத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, 13இல் இருப்பதையும் பிடுங்குவதற்கு தமிழர்களையே பயன்படுத்தும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# அரிசியின் விலையும் அதன்பின்னாலுள்ள அரசியலும் பொருளியலும்



கந்தையா அருந்தவபாலன்

இந்தக் கட்டுரை தொடர்பாகச் சிந்தித்தபோது 1960 களில் ஆரம்ப வகுப்புகளில் பாடமாக்கிய சில வசனங்கள் நினைவுக்கு வந்தன. 'இலங்கை ஒரு விவசாய நாடு. இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசிச்சோறு. இலங்கை சீனா, சீயம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து வருகிறதுன' ஆறு தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும் விவசாயநாடு, இறக்குமதி போன்ற அடைமொழிகளை இலங்கை தவிர்க்க முடியாத ஒரு நிலையிலேயே இன்றும் இருக்கிறது. அந்நேரத்தில் இலங்கையைவிட பலவழிகளிலும் பின்தங்கியிருந்த நாடுகள்பல அபிவிருத்தியில் முன்னேறிவிட்டபோதும் இன்றும் நாம் அரிசிக்காக அடிபடும் நிலையிலேயே இருக்கிறோம். நிறைந்த இயற்கை வளம், மனிதவளம் மட்டுமன்றி இயலளவான குடித்தொகையும் கொண்டிருந்தும் இன்றும் கூடியளவு வறுமையும் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் கொண்ட ஒரு நாடாக இருப்பதற்கான பிரதான காரணம் நாட்டை இதுவரை ஆட்சிசெய்த அரசியல்வாதிகள்தான் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அதன் நீட்சியே அரிசியின் இன்றைய விலையேற்றமாகும். அரிசியின் விலையில் பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும் அதனுடன் தொடர்புடைய பாதகமான காரணிகளைச் சாதகமாக்குவதுதான் அரசியல் கொள்கை வகுப்போரின் கடமையாகும். அதைச் செய்யத் தவறியதன் விளைவை நாடு இன்று அனுபவிக்கிறது.

நெல் பருவகாலப் பயிர்களில் ஒன்று. ஓராண்டு முழுமைக்குமான கேள்வியை ஓரிரு மாதங்களில் அது வழங்குகிறது. தை, மாசி மாதங்களில் அதிகளவிலான காலபோக வழங்கலையும் ஓகஸ்ட் மாதத்தின் முன்பின்னாக கணிசமான அளவு சிறுபோக வழங்கலையும் அது நாட்டுக்குத் தருகிறது. பொருளியல் கோட்பாட்டின்படி பொருளொன்றின் சந்தைவிலையை அப்பொருளுக்கான கேள்வியும் நிரம்பலுமே தீர்மானிக்கிறது என்றாலும் அது சந்தையில் நிறைபோட்டி நிலவும்போதே சாத்தியமாகிறது. நெல்வழங்கலில் ஓரளவு நிறைபோட்டி நிலவினாலும் அதன் பருவகால வழங்கல், நெல் கொள்வனவு, அரிசி உற்பத்தி, அதன் விநியோகம் போன்றவற்றில் சிலருரிமையும் காணப்படுவதால் சந்தை விலையைத் தீர்மானிப்பதில் புறக்காரணிகளே செல்வாக்குச் செலுத்தும் நிலைமை இங்கு காணப்படுகிறது. இதனால் அரிசி உற்பத்தியாளர் மற்றும் வர்த்தகர்கள் போன்ற ஒருசில தரப்புக்கள் சந்தை நடவடிக்கைகளைத் தமக்கேற்றவகையில் கட்டுப்படுத்தி மிகை இலாபம் பெறும் வகையில் அரிசி விலைமீது செல்வாக்குச் செலுத்த முடிகிறது. இந்த இடத்தில்தான் ஆட்சியாளரின் பொருத்தமான கொள்கையும் நடைமுறைகளும் அவசியமாகின்றன. ஆனால் இதனை ஆட்சியாளர்கள் சீரானமுறையில் கையாளாது விட்டது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் அவர்களின் நலனுக்காகவும் அதனைக் கையாண்டுள்ளனர். அதாவது நாட்டின் பாரிய அரிசி ஆலைகள் அரசியல்வாதிகளின் உறவினர்கள், ஆதரவாளர்களுக்குச் சொந்தமாக இருப்பதால் அவர்களுக்கு வாய்ப்பாகவும் மறுபுறத்தில் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இறக்குமதிக்கு அனுமதியளித்து தரகுப்பணத்தையும் பெறமுடிவதாலும் பிச்சைக்காரன் புண்போல அதனை வைத்திருக்கவும் விரும்பினர்.



இலங்கையில் 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக்கமைய ஒருவரின் ஒரு ஆண்டுக்கான சராசரி அரிசி நுகர்வு 112.3 முப ஆகும். இதற்கமைய ஒருமாதத்துக்கு 211930 மெற்றிக் தொன் அரிசியும் ஆண்டுக்கு 2.54 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியும் குறைந்த பட்சத் தேவையாகும். இதேவேளை அவ்வாண்டின் பெரும்போக (மஹா) நெல் உற்பத்தி மட்டும் 2.6 மில்லியன் மெற்றிக் தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனுடன் சிறுபோக (யால) நெல் உற்பத்தியும் சேர்ந்தால் நாட்டின் அரிசித்தேவைக்கு மேலதிகமாக மூன்று மாதத்துக்குத் தேவையான அரசி மிகையாயிருக்குமென மதிப்பிடப்பட்டது. இலங்கை 2010-13 காலப்பகுதியில் நெல் உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றிருந்தபோதும் அதன்பின்னர் அவ்வாறான ஒருநிலைமை ஏற்படவில்லையாயினும் 2020-21 ஆண்டைத்தவிர ஏனைய ஆண்டுகளில் நாட்டின் தேவைக்கு அண்மித்ததாகவே நெல்உற்பத்தி காணப்பட்டு வருகிறது. அதனால் அரசிப்பற்றாக்குறையோ அதனடிப்படையில் விலையில் பெருமளவு அதிகரிப்போ ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. அப்படியிருந்தும் இன்று அரிசியின் விலை இவ்வாறு அதிகரித்துச் செல்வதேன்? இங்குதான் பாரிய அரிசி உற்பத்தியாளர்களின் தலையீடுகளும் அரசாங்கத்தின் பலவீனங்களும் தாக்கம் செலுத்துகின்றன.

அரிசிக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றது. அதனால் அதன் விலையைத் தீர்மானிப்பதில் அரிசியின் வழங்கலே அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். நெல் மற்றும் அரிசி விலைகளைப் பொறுத்து வழமையாக காலபோக அறுவடைக் காலப்பகுதியில் கணிசமான வீழ்ச்சியும் சிறுபோக அறுவடைக் காலத்தில் சிறியளவிலான வீழ்ச்சியும் காணப்படும் அதேவேளை நவம்பர், டிசம்பர் மாதங்களில் உயர்வாக இருப்பதற்கான காரணம் தெளிவானது. தை, மாசி மாதங்களில் விலை வீழ்ச்சியடைவதற்கு அறுவடை மட்டும் காரணமன்று. அதில் பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். காரணம் அப்போதுதான் விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யமுடியும். அதைப்போன்றுதான் நவம்பர், டிசம்பர் மாதங்களில் விலை உயர்வதற்கு நெல்லின் கையிருப்பு குறைவது மட்டும் காரணமில்லை. அந்த நிலைமையை அரிசி உற்பத்தியாளர்கள் தமக்குச் சாதகமாக்குவதும் இன்னொரு காரணம். அண்மையில் பிரபல அரிசி ஆலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைக்கமைய இவ்வாண்டின் தேவைக்கு மேலதிகமான நெல் அவ்வாலைகளின் களஞ்சியங்களில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளமை இதற்கான ஆதாரமாக அமையும்.

நாட்டின் பிரதான உற்பத்தித் துறைகளில் ஒன்றாக நெல் விவசாயம் இருப்பதால் அது நாட்டின் பொருளாதாரத்தில் மட்டுமன்றி சமூகநலரீதியாகவும் முக்கியம் பெறுகிறது. அது பிரதான உணவுப்பொருள் என்பதற்கப்பால் உள்நாட்டு உற்பத்தி, தொழில்வாய்ப்பு, குறைவருமான வகுப்பினரின் வாழ்க்கைத்தரம், வருமான இடைவெளி, இறக்குமதிச் செலவு போன்ற பல்வேறு பேரினப் பொருளாதார மாறிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அதனால் ஒருபுறத்தில் உற்பத்தியாளரான விவசாயிகள் நலனுக்காகவும் மறுபுறத்தில் நுகர்வோரான மக்களுக்காகவும் இத்துறைமீது கூடிய அக்கறை செலுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இத்துறைமீதான அரசாங்கத்தின் அக்கறை அல்லது தலையீடு என்பது அடிப்படையில் இருவழிகளில் இடம் பெற முடியும். ஒன்று நெல்லின் உற்பத்தியளவை தளம்பலின்றி பேணுவதுடன் அதனை அதிகரிப்பதற்கான உந்துதல்களை வழங்குதல். தேவையான அடிக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கப்பால் உள்ளீடுகளின் கிடைப்பனவுகளை உறுதிப்படுத்துதல், மானிய வசதிகள், காப்புறுதி மற்றும் நட்டஈடுகள், உத்தரவாத விலைகளும் கொள்வனவுகளும், தொழில்நுட்ப உதவி கள் போன்றன மூலம் அரசாங்கம் இதனை உறுதி செய்ய முடியும். மற்றது நெல் மற்றும் அரிசிக்கான சந்தை விலைகளைச் சீராகப் பேணுவதற்கான அரச தலையீடு.

> புதிய அரசாங்கத்தின்மீது சும்மாவே குறைகாணும் எதிர்க்கட்சிகளுக்கு அரிசிவிலை அவல் கிடைத்தமாதிரி. அத்துடன் அத்தியாவசிய உணவு என்றவகையில் அது அரசாங்கத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அரிக்கத் தொடங்கும்.



நெல் உற்பத்தியாளருக்காக மட்டுமன்றி அரிசி நுகர்வோருக்காகவும் நெல்லுக்கான சந்தை விலையைச் சீராகப் பேணவது அவசியம் என்பதற்கு அப்பால் சந்தைப் பொருளாதாரம் நன்கு விருத்தியடையாத இலங்கை போன்ற நாடுகளில் அது அரசின் கடமைகளில் ஒன்றாகவும் உள்ளது. நெல்லுக்கான அல்லது அரிசிக்கான விலையை நிர்ணயித்தல் என்பது இருமுனைக்கூர் கத்தியொன்றுக்கு ஒப்பானதாகும். நெல்லுற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்பது மட்டுமன்றி நுகர்வோருக்கும் அரிசி நியாயமான விலையில் கிடைக்கவேண்டும். அரச வருமானம் என்பதற்கப்பால் விவசாயிகளின் நலன் கருதியே இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு கிலோவுக்கு 65 ரூபா தற்போது வரியாக அறவிடப்படுகிறது. ஆனால் அது நுகர்வோருக்குப் பாதிப்பானது. நெல் மற்றும் அரிசியின் விலையை இருதரப்புக்கும் பாதிப்பின்றி சீராகப் பேணுவதற்கு அரசாங்கத்தின் முன் பல தெரிவுகள் உண்டு.

1. உத்தரவாத விலையும் கொள்வனவும். நெல்லுக்கான உத்தரவாத விலை ஏலவே நடைமுறையிலுள்ளது எனினும் அவ்விலையில் அரசு மிகை வழங்கலைக் கொள்வனவு செய்தால் மட்டுமே அவ்விலை பயனுறுதி வாய்ததாக இருக்கும். இதில்தான் அரசதரப்பில் பலவீனங்கள் பல உள்ளன. நிதிப் பற்றாக்குறை, களஞ்சிய வசதியின்மை போன்ற பல காரணங்களால் அரசின் கொள்வனவு மட்டுப்படுத்தப்படுகிறது.

அத்துடன் தேவைப்பாடுகள், பணம் வழங்குவதில் தாமதம் போன்றன உத்தரவாத விலையிலும் குறைவான விலைக்குத் தனியாருக்கு விற்பனை செய்வதற்கு விவசாயிகளைத் தூண்டுகிறது. இக்குறைபாடுகள் களையப்படுவது அவசியம். இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லை அல்லது அரிசியாக்கி சந்தை வழங்கலைச் சீராகப் பேணுவதன் மூலம் விலை உறுதிப்பாட்டைப் பேணமுடியும். ரணில் அரசாங்கம் சென்ற ஆண்டு நெல் கொள்வனவுக்காக போதியளவு நிதி வழங்காமை தற்போதைய அரிசி விலையேற்றத்துக்கான பிரதான காரணம்.

2. அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையும் தனியார் துறையை ஒழுங்குபடுத்தலும். கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ் விலையில் நுகர்வோரால் பெறமுடிகி றதா? அதனுடன் தொடர்புடைய குறைபாடுகள் களையப்படவேண்டும்.

3. கட்டுப்பாட்டு விலையால் ஏற்படும் அரிசிக்கான மேலதிக தேவையை இறக்குமதி மூலம் நிரப்புதல்.

இதனைத் தற்போது அரசாங்கம் செய்வது போல வெள்ளம் வந்தபின் அணைகட்ட முயற்சிக்காமல் முற்கூட்டிய திட்டமிடல் அவசியம். இது தற்போதைய அரசாங்கம் எதிர்பார்க்காத ஒன்று மட்டுமல்ல அரிசியை நாம் ஒருபோதும் இறக்குமதி செய்யமாட்டோம் என்று மக்களுக்கு வாக்கும் அளித்து விட்டார்களே.

புதிய அரசாங்கத்தின்மீது சும்மாவே குறைகாணும் எதிர்க்கட்சிகளுக்கு அரிசி விலை அவல் கிடைத்தமாதிரி. அத்துடன் அத்தியாவசிய உணவு என்றவகையில் அது அரசாங்கத்தின்மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அரிக்கத் தொடங்கும். எனவே அடுத்த ஆண்டு இத்தகைய நிலைமை தோன்றாத வகையில் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் போன்றவற்றில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இன்டியா' கூட்டணியின் தலைமை பதவி யாருக்கு?

இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் "இன்டியா" கூட்டணியில் தலைமைப் பதவிக்கான பூசல் தீவிரமடைந்துள்ளது.

தற்போது, 'இன்டியா' கூட்டணியின் தலைமை காங்கிரசின் கையில் உள்ளது. ஆனால், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, இந்தக்கூட்டணியை வழி நடத்த விருப்பம் தெரிவித்ததிலிருந்து, கூட்டணியின் தலைமையை மாற்றும் விவகாரம் வேகமெடுத்துள்ளது.

சமாஜ்வாதி, என்சிபி (சரத் பவார்), சிவசேனா (உத்தவ் தாக்கரே) ஆகிய கட்சிகள் இந்த விவகாரத்தில் மம்தா பானர்ஜியை ஆதரித்துள்ளன.

தற்போது மம்தா பானர்ஜிக்கு ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவர் லாலு யாதவ் ஆதரவு அளித்ததை அடுத்து, தலைமை மாற்றம் குறித்த விவாதம் தீவிரமடைந்துள்ளது.

லாலு யாதவின் கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் காங்கிரசுக்கு இடையே நீண்ட காலமாக நல்லுறவு இருந்து வருகிறது. இதுவரை, பிகார் மற்றும் ஜார்கண்டில் இரு கட்சிகளுக்கு இடையே நல்ல ஒற்றுமை இருந்து வருகின்றது.

லாலு யாதவ் மற்றும் அவரது மகன் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியுடன் தனிப்பட்ட முறையில் நல்லுறவு கொண்டவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இதனால் "இன்டியா" கூட்டணியின் தலைமைப் பதவிக்கு மம்தா பானர்ஜியை ஆதரிப்பதாக லாலு யாதவ் கூறியிருப்பது பல ஆய்வாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இன்டியா "கூட்டணியின் தலைமைப் பொறுப்பை மம்தாவுக்கு வழங்க வேண்டும் நாங்கள் அவர்களுக்கு ஆதரவளிப்போம்" என்று லாலு யாதவ் கூறினார்.

மம்தாவுக்கு தலைமைப் பொறுப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்ததாக செய்தியாளர்கள் அவரிடம் கூறியபோது,




"காங்கிரசின் எதிர்ப்பால் எதுவும் நடக்காது. மம்தாவுக்கு தலைமைப் பொறுப்பு கொடுக்க வேண்டும்" எனவும் லாலு யாதவ் தெரிவித்தார். தேஜஸ்வி யாதவும் மம்தாவை ஆதரித்து, தனது தந்தையின் முடிவை ஆமோதித்துள்ளார்.

மம்தா பானர்ஜியின் தலைமை குறித்து எந்த ஆட்சேபனையும் இல்லை என்றார். ஆனால் எந்த முடிவையும் அனைவரின் (கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும்) சம்மதத்துடன் எடுக்க வேண்டும் என தேஜஸ்வி கூறியுள்ளார்.

இதனிடையே, டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை என ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார். இப்படிச் செய்வதன் மூலம் இன்டியா கூட்டணிக்கு காங்கிரஸ் தலைமை தாங்குவதை அவர்களும் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

**காங்கிரஸ் தலைமை மீது 'அதிருப்தி' ஏன்?**

இன்டியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள சில கட்சிகள் காங்கிரஸ் தலைமை குறித்து கேள்வி எழுப்புவது ஏன்? என்று காங்கிரஸ் அரசியலை ஆழமாகப் புரிந்து கொண்ட மூத்த பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளரும், எழுத்தாளருமான ரஷித் கித்வாய் இதற்கான காரணத்தை விளக்குகிறார்.

"மக்களவை தேர்தலில் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, சிவசேனா (உத்தவ் தாக்கரே), என்சிபி (சரத் பவார்), திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் சிறப்பாக செயல்பட்டதால் எதிர்க்கட்சிகளின் மன உறுதி அதிகமாக இருந்தது.

சட்டசபை தேர்தலில் பா.ஜ.கவை தோற்கடித்து விடுவோம் என அவர்கள் நினைத்தனர். ஆனால் மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியடைந்த பிறகு, குறிப்பாக ஹரியாணா மற்றும் மகாராஷ்டிராவில், இது 'இன்டியா' கூட்டணியை பலவீனப்படுத்தியதாக கூட்டணியில் உள்ள எதிர்க்கட்சிகள் கருதுகின்றன. காங்கிரஸால் அவர்களது கதை முன்னேறவில்லை என அவர்கள் கருதுகின்றனர். எதிர்க்கட்சிகளின் இந்த தொடர் எரிச்சலின் காரணமாகத்தான் இந்தக் கூட்ட ணியின் தலைமையை மாற்றும் கோரிக்கை எழுந்துள் ளது.

சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியை சந்தித்தது. ஹரியாணாவில் மொத்தமுள்ள 90 இடங்களில் 37 மட்டுமே கிடைத்தது.

அதேசமயம் மகாராஷ்டிராவில் மகாவிகாஸ் அகாடி கூட்டணியில் காங்கிரஸ் அதிகபட்சமாக 103 இடங்களில் போட்டியிட்டது, ஆனால் 16 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. ஆனால், இந்தக் கூட்டணியில் காங்கிரசின் தலைமை குறித்து கேள்வி எழுப்பும் கட்சிகளின் செல்வாக்கு ஓரிரு மாநிலங்களுக்கு மேல் இல்லை என்பதும் உண்மை.

அது மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் அல்லது லாலு யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் அல்லது கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி அல்லது சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆக இருக்கலாம். அதேசமயம் நாடு முழுவதும் காங்கிரஸ் இன்னும் பரவலாக உள்ளது என ரஷித் கித்வாய் தெரிவித்தார்.

---




**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதாக ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளாரே. அது சாத்தியமாகும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்று பேசிக்கொண்டிருப்பது நல்லவிடயம்தானே. தமிழர் அரசியலில் தமிழ் அரசு கட்சியும் தமிழ் காங்கிரசும் கோலோச்சிக்கொண்டிருந்த காலத்தில், தமிழ் அரசின் தளபதி என்று வர்ணிக்கப்பட்ட அ. அமிர்தலிங்கமும், காங்கிரசின் தளபதி என்று வர்ணிக்கப்பட்ட சிவசிதம்பரமும் ஒரு தேர்தலில் தோல்வியடைந்த பின்னரே இரண்டு கட்சிகளையும் இணைக்கும் முயற்சி நடந்ததும், பின்னர் இரண்டு கட்சிகளும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியதும் பழைய சங்கதிதான். ஆனால் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் அரசின் சுமந்திரன் தோல்வி அடைந்தபோதிலும், தான் தோற்றாலும் தமிழ் அரசுதான் தமிழர்களின் பிரதான அரசியல் சக்தி என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்றுதானே பெருமை பேசினார். அப்படியிருக்கையில் தோற்றுப்போன கட்சிகள் எல்லாம் மீண்டும் சேருமா என்பதும் அப்படி சேர்ந்தாலும் எதற்காக சேருகின்றன என்பதும்தான் நாம் கவனிக்கவேண்டியது.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** 2024ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கத்தினால் நான்கு பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டக்கூடிய வெளிப்படையான வேலைத் திட்டத்தின் கீழேயே மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** முன்னூறுக்கும் அதிகமான புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதால் அரசாங்கத்துக்கு 4 பில்லியன் ரூபாக்கள் அதாவது நானூறு கோடி ரூபா வருமானம் கிடைத்தது என்றால், அவற்றை சிபார்சுசெய்த எம்.பி.க்களுக்கு எத்தனை பில்லியன் ரூபாக்கள் கிடைத்திருக்கும் என்பதை கணக்குப் பார்க்கச் சொல்லியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி என்றுதான் நினைக்கின்றேன்.

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் போலியானது என ஜப்பான் பல்கலைக்கழகம் உறுதி செய்துள்ள நிலையில் அவர் பதவி விலகவேண்டும் எனவும் பாராளுமன்றத்தை சுத்தம் செய்ய வந்தவர்களால் இன்று பாராளுமன்றத்துக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவித்திருக்கிறாரே. கலாநிதி பட்டத்தைப் பெறாமலே பட்டம் பெற்றதாக யாராவது சொல்லியிருப்பார்களா? என்னதான் நடக்கின்றது?

**வியுக்தியார்:** கலாநிதிப் பட்டம் என்பது பல்கலைக் கழகங்களில் படித்து பிஎச்டி பட்டம் பெறுவதுதான் என்று நினைப்பவர்களால் வந்ததுதான் இந்தப் பிரச்சினை. பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டங்களையும் வழங்குவதுண்டு. ஒருவரின் நீண்டகால சேவை, அல்லது அவர் தான் பணியாற்றும் துறையில் செய்த சாதனைகள் என்பவற்றை வைத்துக்கொண்டு பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டங்களை வழங்குகின்றன. நமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் அவர்களுக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கியிருக்கின்றது. அவ்வாறு வழங்குவது, அவர் அந்தப் பட்டதை பெறுகின்ற அளவிற்கு அவர் சார்ந்த துறையில் அவர் பெற்றிருக்கக்கூடிய அனுபவத்திற்கும் திறமைக்கும் கிடைப்பதுதான். ஆனால் கொடுமை என்னவென்றால், சில பல்கலைக்கழகங்கள் எந்தத் தகுதியும் இல்லாத ஒருவருக்கு இந்த பட்டங்களை வழங்குவதுதான். உலகில் இவ்வாறு டாக்டர் பட்டங்களை வழங்குவதற்கென்றே சில பல்கலைக்கழகங்கள் 'கடைவிரித்து' ஆட்களைத் தேடிவருகின்றன. சில ஆயிரம் டாலர்களை கொடுத்தால் டாக்டர் பட்டம் வழங்குவதற்கென்றே நூற்றுக்கணக்கான பல்கலைக்கழகங்கள் இயங்கிவருகின்றன. இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்றவரும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றவர் என்பதால் தன்னை கலாநிதி என்று குறிப்பிடுவதும் தவறானது இல்லைத்தான். சபாநாயகர் பிச்டி படித்துப் பெற்றாரா அல்லது கௌரவ டாக்டர் பெற்றாரா என்பதை தெளிவுபடுத்தினால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்குவதற்காக விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையின் கீழ் தேசப்பற்று கூட்டணியொன்று ஸ்தாபிக்கப்படும் என்று முன்னணியின் பிரதித் தலைவர் முன்னாள் எம்.பி. ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளாரே. அப்படியெனில் சிலருக்கு மட்டும் தான் தேசப்பற்று இருக்கின்றது என்கிறாரா?

**வியுக்தியார்:** கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமது முன்னாள் தோழர்கள் அறுதிப்பெரும்மான்மையைப் பெற்றுக்கொள்ள வசதியாக தான் தேர்தலில் போட்டியிடவில்லை என்று அறிவித்தவர்கள் அல்லவா இவர்கள். தாம் போட்டியிட்டாலும் வெற்றிபெறமுடியாது என்பதால் போட்டியிலிருந்து விலகி இருந்தவர்கள். இப்போது உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறுவது எதனால் என்பதை புரிந்துகொள்ள அரசியல் அறிவு அதிகம் தேவையில்லையே. தற்போதைய உள்ளூராட்சி தேர்தல் முறையில் எந்த உள்ளூராட்சி மன்றத்தில் போட்டியிட்டாலும் ஒரு பிரதிநிதியையாவது பெறுவது சுலபமானது என்பதால் அவர்கள் போட்டியிடப்போகிறார்கள் அவ்வளவுதான். அதற்கும் அவர் வைக்கும் பெயருக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற முதலாவது அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் செயற்பாடு குறித்து அதில் அரசு அதிகாரிகள் விசனம் தெரிவித்ததுடன் கட்டுப்படுத்தவேண்டியவர்கள் வேடிக்கை பார்த்தனர் என குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாக ஒரு செய்தியைப் பாாத்தேன். எதற்காக இவர்கள் விசனம் தெரிவித்தனர் என்பது உங்களுக்கு தெரியுமா?

**வியுக்தியார்:** அந்த எம்.பி.யின் செயற்பாடுகள் எப்படி இருக்கும் என்பது தெரிந்ததுதானே. அவர் பாராளுமன்றத்திலோ அல்லது இப்படியான கூட்டங்களிலோ எப்படி நடந்துகொள்ளுவார் என்பதையும் தெரிந்துகொண்டுதானே யாழ்ப்பாண மக்கள் அவரை தெரிவுசெய்திருக்கிறார்கள். பின்னர் எதற்கு அவரது செய்பாடுகளை அதிகாரிகள் கண்டுகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. அவர் அப்படி நடந்துகொள்ளவில்லை என்றால்தானே அதிகாரிகள் விசனப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் வீழ்ச்சியுடன் ரஷ்ய தளங்கள் மூடல் : சிரியாவில் எல்லைகளை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



சிரியாவில் பஷீர் அல் அசாத் அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இரு முக்கிய விடயங்கள் மத்திய கிழக்கு அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

முதலாவது விடயம் சிரியாவில் இஸ்ரேலிய அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் (Golan Heights) குன்றுகளுக்கு அப்பால் உள்ள இராணுவமற்ற பாதுகாப்பு வலயத்திற்கு மீண்டும் தனது தரைப்படைகளை இஸ்ரேல் நகர்த்தி உள்ளது.

இரண்டாவது முக்கிய விடயம் சிரியா நாட்டில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக்குறியாகி உள்ளது.

ரஷ்யா தனது சிரிய தளங்களில் இருந்து பின்வாங்கிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்தாலும், தற்போது ரஷ்யாவின் கடற்படை, வான்படை வாபஸ் பெறப்பட்டுள்ளதாக சுயாதீன தக வல்கள் தெரிவிக்கின்றன.

**இஸ்ரேல் அழிக்கும் சிரிய ராணுவ வளம்**


சிரியாவின் ஆட்சி மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கு மத்தியில் இஸ்ரேல் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

சிரியாவில் உள்ள ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளுக்கு செல்வதை தடுக்க, அங்கு தொடர் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளதாகவும், இதில் சிரியாவின் ஆயுத கிடங்குகள் பலவும் அழிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிப் படைகள் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், கிளர்ச்சியாளர்களின் கையில் இரசாயன ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகள் சென்று சேர்வதை தடுக்க இஸ்ரேல் முயற்சிப்பதாக தெரிவித்துள்ளது.

அல் கொய்தா போன்ற அமைப்புகளுடன் தொடர்புடைய கிளர்ச்சிப் படைகளின் வளர்ச்சியை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






இதேவேளை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர், சிரியா முழுவதும் உள்ள ஏவுகணைகள் அனைத்தையும் அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் நானூறுக்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை கூறியுள்ளது.

**ரஷ்ய இராணுவ தளங்களின் நிலை**

அசாத்தின் ஆட்சியின் விரைவான கவிழ்ப்பு ரஷ்யாவிற்கும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பாரிய அடியை அளித்துள்ளது.

கிரெம்ளின் அரசின் நீண்ட கால கூட்டாளியான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், சிரிய பிரதேசத்தில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக்குறியாக உள்ளது.

ரஷ்யா தனது சிரியாவின் தளங்களில் இருந்து பின்வாங்குகிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்துள்ளது. சிரியாவில் ரஷ்யாவிற்கு இரண்டு இராணுவ தளங்கள் உள்ளன. மத்தியதரைக் கடலோரத்தில் உள்ள டார்டஸ் கடற்படை தளம் உள்ளது.

அத்துடன் லதாகியா துறைமுக நகரத்திற்கு அருகிலுள்ள க்மெய்மிம் (Khmeimim Air Base) விமான தளம் உள்ளது. அவை கிரெம்ளினின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் புறக்காவல் நிலையங்களாகக் கருதப்படுகின்றன.

ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சிரிய கிளர்ச்சிப் போராளிகள் ஏற்கனவே இரண்டு தளங்களையும் அடிப்படையாகக் கொண்ட லதாகியா மாகாணத்தின் முழு கட்டுப்பாட்டையும் எடுத்துள்ளனர்.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவின் கூற்றுப்படி, இராணுவ தளங்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் திறன் கொண்டவர்களுடன் சிரியாவில் தொடர்பை ஏற் படுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறது.

சிரியாவுடன் தற்போதய புதிய கிளர்ச்சியாளர்கள் அரசுடன் புதிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மாஸ்கோ தளங்களின் தலைவிதியைப் பாதுகாத்துள்ளதாக ரஷ்ய அரசு ஊடகம் கூறியுள்ளது.

ரஷ்யாவின் ஹெமிமிம் மற்றும் டார்டஸ் தளங்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாகக் கூறும் ரஷ்ய இராணுவ பதிவர்கள் உட்பட பல செய்திகள் வந்துள்ளன.

**சிரிய ராணுவ இலக்குகள் குறிவைப்பு:**

சிரிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு கூறியது.

> சிரியாவின் கடற்படை, இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், கடந்த சில நாட்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை, இராணுவ மையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது

ஆயினும் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட ஒரு அறிக்கையில், இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோபாய திறன்களை அழிப்பதை இஸ்ரேலிய படையினரின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடராக சிரியாவின் கடற்படை, இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த இரு நாட்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவ சொத்துக்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

**சிரிய கடற்படையை அழிக்க முயற்சி:**

லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்தன. அவை பல நூறு மைல்கள் வரை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இத்துடன் சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை பெரும் வெற்றி பெற்றதாகவும் இஸ்ரேலிய அரசு அவர் தெரிவித்துள்ளது. சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால்மைராவில் உள்ள விமானநிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட - பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிபய பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது.

சிரியாவை ஆக்கிரமிக்க முயற்சியா?

இஸ்ரேல் திடீரென பயங்கர தாக்குதல் நடத்தியதால், சிரியாவை கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தகவல் பரவியது. இதை மறுத்த இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள், சிரியா எல்லையில் உள்ள இஸ்ரேலின் பகுதியை கைப்பற்றத்தான் ராணுவம் நுழைந்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி இஸ்ரேல் டேங்குகள் செல்கின்றன, என்ற செய்தி தவறானவை என்றனர்.

அத்துடன் தெற்கு சிரியாவை ராணுவ பலம் அற்றதாக மாற்ற இந்த தாக்குதல் அவசியம். அசாத் ஆட்சியை பின்பற்ற முயற்சிக்கும் எந்த ஒரு படைக்கும் இதே கதிதான் ஏற்படும். சிரியா எல்லையில் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகள் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காக ஆயுத கிடங்குகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**ஐ. நா கடும் கண்டனம்:**

சிரியா எல்லையில் ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இஸ்ரேல் நுழைந்ததற்கு எகிப்து, ஜோர்டன், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சிரியாவின் நிலையற்ற தன்மையை, தனது எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்துக்கு இஸ்ரேல் பயன்படுத்தி கொள்வதாக அந்த நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

சிரியாவின் ஒரு பகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவியது 1974-ம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக உள்ளது என ஐ.நா சபை குற்றம் சாட்டியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் மழை தொடரும்

கொழும்பு, டிசெ. 15

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவுக்கு பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களில் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# ஓட்டோ - வான் மோதி விபத்து! சாரதி படுகாயம்

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சி உமையாள்புரம் ஏ - 9 வீதியில் ஓட்டோ - வான் மோதி இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து பளை நோக்கிச் சென்ற ஓட்டோவும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வானும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் ஓட்டோவைச் செலுத்திய சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# இந்திய உயர்ஸ்தானிகர் அமைச்சர் பிமல் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 15



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பானது பத்தரமுல்ல பகுதியில் அமைந்துள்ள அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இரு தரப்புக்கும் இடையிலான கலந்துரையாடலில், இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து விசேட அவதானம் செலுத்தப் பட்டது.

மேலும், அண்டை நாடான இலங்கையுடன் வலுவான, நீண்ட கால உறவைப் பேணுவதற்கு இந்திய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது குறிப்பிட்டார். (எ)



# பிரதமரை சந்தித்து பேசினார் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, டிசெ. 15

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்கள், இலங்கை பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவை நேற்று முன் தினம் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் மூலோபாய கூட்டாண்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

அத்துடன் தற்போது பல்வேறு அபிவிருத்தி நிலைகளில் உள்ள பல இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இந்த கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த தூதுக்குழுவில் தூதுவருடன் இந்திய உயர் தூதரக சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி பி. டபிள்யூ.ஜி.சி. சாகரிகா போகஹவத்த, மற்றும் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு பணிப்பாளர் நாயகம் திரு நிலுக கதுருகமுவ ஆகியோர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதியின் இந்தியப் பயணம்; இருதரப்பு உறவுகள் ஆராயப்படும்

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்தியத் தலைநகரில் இடம்பெறவுள்ள வர்த்தக நிகழ்வொன்றிலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க நாளை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (அ)

# சர்வதேச சமூகத்திடம்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களிடம் இருந்து எதிர்ப்பு வராது என்பதால் அவற்றை விரைவாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஆனால், மக்கள் மத்தியில் பிவுகளை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகள் என்று வரும்போது சர்வதேச சமூகம் வழங்க முன்வருகின்ற உதவிகளை ஏற்றுக் கொள்வதில் அரசாங்கம் பெருமளவுக்கு நாட்டம் காட்டக்கூடிய வாய்ப்பு இல்லை. அத்துடன் அது விடயத்தில் அரசாங்கம் ஒரு மனதுடனும் இல்லை. அண்மையில் மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் காணப்பட்டதை போன்று தேசிய பாதுகாப்பு மற்றும் இனநெருக்கடி போன்ற மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தக்கூடிய பிரச்சினைகளை கடந்து செல்வதில் அரசாங்கம் சவால்களை எதிர்நோக்குகிறது.

ஊழல் போன்ற விடயங்களில் சர்வதேச உதவிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கமுடியும் என்கிற அதே வேளை பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் இணையவெளி பாதுகாப்பு சட்டம் போன்ற சட்டங்களைப் பதிலீடு செய்வது போன்ற விடயங்களில் மிகவும் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் கருத்தொருமிப்பை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். தேசிய பாதுகாப்பு மற்றும் இனத்துவ அதிகாரப்பகிர்வின் பெயரில் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை பொறுத்தவரை இந்த இரு சட்டங்களும் வலுவுடையவையாக இருக்கின்றன.

சமூகங்களை மேலும் துருவமயப் படுத்தக் கூடிய ஆபத்துகளைக் கொண்ட கொள்கைகள் உறுதிப்பாட்டை மலினப்படுத்திவிடக் கூடும். இந்த இடத் தில்தான் நாட்டிற்குள்ளும் வெளியிலும் (ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற அரங்கங்களில்) பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டிய அவசியத்தைக் கொண்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் சமூகக்கூட்டிணைவை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது

# 13ஆவது திருத்தச்....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையே ஏற்படும். வர முடியாத விடயங்கள் பற்றி பேசிக் கொண்டிராமல், இருப்பதை பயன்படுத்துவது பற்றிச் சிந்திப்பது மட்டும்தான் தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரேயொரு தெரிவு. மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் - அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்னும் கோரிக்கைகள்தான், இன்றைய சூழலில் தமிழின் கோரிக்கைகளாக இருக்க வேண்டும். அதற்கான வடக்கு கிழக்கில் இருக்கும் அனைத்து தமிழ் கட்சிகளும், சிவில் சமூகக் குழுக்களும் செயலாற்ற வேண்டும்.

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
05 . 04 . 1973



அரன் அடியில்
11 . 12 . 2024

## மனோகரன் றட்ணகிளி (லலிதா)

கற்பகப்பிள்ளையார் வீதி, வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் றட்ணகிளி (லலிதா) கடந்த 11.12.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் கனகரட்ணம் - மற்றும் செல்வராணி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற க. இராசேந்திரம் - மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருகளும், மனோகரன் (N.P. கேபிள்விசன் உரிமையாளர்) அவர்களின் அருமை மனைவியும், விக்னேஷன், அருள்நேஷன், கபிஷன், ஜிலானி ஆகியோரின் அருமைத் தாயாரும், வி. நிவேதா, அ.சுரேக்கா, க.பிரகாஷினி ஆகியோரின் அன்பு மாமியும், வி.சஞ்சனாவின் பேர்த்தியும், க.றட்ணவதனா, ப.றட்ணசாந்தா, இதயகுமாரன், சு.றட்ணபிரபா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
வட்டு வடக்கு, சித்தன்கேணி.

தகவல்:
இ.மனோகரன் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்த உள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## ஐந்தரை...

தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினர் கேட்டுக்கொண்டதுடன், மற்றொரு தரப்பினர் அவரே தொடர்ச்சியாக தலைவராக செயற்பட வேண்டும் என்றும் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதனால் நேற்றைய கூட்டம் முழுவதும் அந்த விடயம் தொடர்பாகவே பேசப்பட்டதுடன், முடிவுகள் எடுக்கப்படாமல் பிறிதொருநாள் அதனை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## தையிட்டி...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்தபோது உரிய அனுமதிகள் எதுவுமின்றி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை கட்டுமானத்தை அகற்றி, காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தி தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (அ)

## தமிழரசில்...

கட்சிக்கு எதிராக போட்டியிட்டவர்களை உடனடியாக கட்சியிலிருந்து நீக்குவதற்கு பொதுச் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது என மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை பொதுச்செயலாளர் எதிர்வரும் நாட்களில் செய்வார்.

வேறு சிலர் கட்சிக்கும் கட்சியின் வேட்பாளருக்கு எதிராகவும் செயல்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவர்கள் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.

கடந்த காலத்தில் அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான விடயங்களில் தமிழரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். ஆகவே அது எங்களுடைய நிலைப்பாடு.

அதனைத் தொடர்ந்து கோட்டாபயவின் காலத்தில் அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாக கொடுத்திருக்கிறோம்.

அது எங்கள் கட்சியின் நிலைப்பாடு. ஆகவே அவ்வாறான நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் எந்த ஆட்சேபனையும் கிடையாது.

ஆனால் வேறு சிலர் எங்களுடைய கட்சிக்கு போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளை செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறான குழப்பங்களை அந்த காலப்பகுதியில் செய்தவர்களோடு அவர்களுடைய வரைவுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்கு கிடையாது.

தமிழரசுக் கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்கு-கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளை தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கை தமிழரசுக் கட்சி.

ஆகவே மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறி செயல்பட மாட்டோம். மற்றவர்கள் எங்களோடு எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயல்படுவதற்கு வருவார்களானால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை - என்றார். (அ)

## சபாநாயகர்...

முன்மொழியப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும், அடுத்த சில தினங்களில் இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரியவருகிறது. (அ)

## மன்னார்...

ஆயராக திருத்தந்தை பிரான்சிஸால் நியமிக்கப்பட்டுள்ளார். திருத்தந்தையின் இந்நியமன செய்தி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கென ஒழுங்குபடுத்தப்பட்ட சிறப்பு கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் உத்தியோகபூர்வமாக நேற்று மாலை வாசிக்கப்பட்டது. இதன்போது மன்னார் மறைவாட்டத்திலுள்ள ஆலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டு இறைமக்களுக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டது. புதிய ஆயராக நியமனம் பெற்ற அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை மன்னார் மறைமாவட்ட குருக்களிலிருந்து நியமனம் பெற்ற முதலாவது ஆயரென்பதுடன் தனது குருத்துவ உருவாக்கத்தை யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலும் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் முழுமையாக பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழரசு...

குழப்பநிலை ஏற்பட்டது.

கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு செயலாளர் முற்பட்டபோது குறுக்கிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வருகை தராமல் கூட்டத்தை நடத்தவேண்டாம் என தெரிவித்தார். இதனால் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

அவர் பதவி விலகிவிட்டார். அவரின் தலைமையில் கூட்டம் நடத்த முடியாது. எனவே உடனடியாக கூட்டத்தை ஆரம்பிக்குமாறு, பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கடும்தொனியில் தெரிவித்தார்.

மாவைக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி வருவீர்களா என கேட்குமாறு சிவமோகன் தெரிவித்தபோது, இது கோல் சென்ரர் அல்ல. கட்சி. உங்கள் வைத்தியசாலை அல்ல இது என்று சாணக்கியன் பதில் அளித்தார்.

அவர் மாத்திரம் அல்லாமல் ஏனைய சில உறுப்பினர்களும் கூட்டத்தை உடனே ஆரம்பிக்குமாறு கூறினர். இதனால் சிவமோகனுக்கும் அவர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது கூட்டத்தை உப தலைவர் தலைமையில் உடனடியாக நடத்துங்கள். இல்லாவிடில் குழப்புவர்களை வெளியேற்ற வேண்டிவரும் என பீற்றர் இளஞ்செழியனும் தெரிவித்தார்.

தனது நிலைப்பாட்டில் சிவமோகனும் விடாப்பிடியாக நின்றமையினால் நீண்ட நேரமாக கூட்டம் ஆரம்பிக்கப்படாமல் அமைதியின்மை நீடித்தது. சிவமோகனுக்கு அருகில் எழுந்து சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவரை சமாளிக்கும் பணியில் ஈடுபட்டபோதும் அது பலனளிக்கவில்லை. இந்த நிலையில் 10.45 மணியளவில் கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு மாவை சேனாதிராசா வருகை தந்தார்.

இதன்போது உங்கள் தலைமையில் கூட்டத்தை நடத்த இயலாது மாவை ஐயா. எனவே அந்த கதிரையில் இருக்க வேண்டாம் இந்தப் பக்கம் இருங்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அவருக்கு தெரிவித்தார். அதனை பொருட்படுத்தாத மாவை சேனாதிராசா முன்பகுதியில் உள்ள இருக்கையில் சென்று அமர்ந்தார். அதன் பின்னர் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (அ)

# அர்ச்சுனாவுக்கு முகத்தில் அறைந்தாற்போல் பதில் கூறிய பெண் அதிகாரி!

யாழ்ப்பாணம், டிசெ.15

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனிப்பட்ட முறையில் எந்த ஓர் அதிகாரியையும் தாக்கி வார்த்தைகளை பிரயோகிக்க முடியாது என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதி பணிப்பாளரான பெண்ணொருவர் பதிலடி கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் பதிலளித்த பெண் அதிகாரி, தங்களது பதவிக்கு ஏற்ற கல்வி தகைமைகளுடன் தான் நாங்கள் அனைவரும் இந்த கலந்துரையாடலுக்கு வந்துள்ளோம்.

இந்த அபிவிருத்தி திட்டத்திற்கான அனைத்து வேலைதிட்டங்களும் முறைப்படியே நடக்கவுள்ளது. அதற்கான அறிக்கைகளை எமக்கு சமர்பிக்க முடியும் என குறித்த பெண் அதிகாரி பதிலளித்தார் (5)

## புதிய...

சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார். அதன்படி எதிர்வரும் 17ஆம் திகதி புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள சபாநாயகர் தொடர்பில் சர்ச்சை எழுந்தால் அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அரச...

இவ்வாறு கூறினார்.

நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுனாவுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் முரண்பாடு என வருகின்ற செய்தி தொடர்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக எவ்வாறு பார்க்கின்றீர்கள் என கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசு அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களை விட கல்வித் தரத்தில் கூடியவர்களாக இருக்கிறார்கள். அறிவுபூர்வமாக படித்துத்தான் அவர்கள் அந்த பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். ஊடகவியலாளர்களுக்கும் எங்களை விட ஊடகத்துறையில் அனுபவம் கூடுதலாகவே இருக்கும். ஆகவே என்னைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் அவர்களை அணுகுவதற்கான முறை இருக்கிறது. மனிதாபிமானத்தையும் மனித மூலதனத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பொறுப்போடும் நடக்கவேண்டும்.

எங்களுடைய கட்சி இதுவரை காலமும் அவ்வாறு தான் நடந்திருக்கிறது. தொடர்ந்தும் அந்த பொறுப் போடும் கண்ணியத்தோடும் அரச உத்தியோகத்தர்களோடு அணுகிச் செயல்படுவோம் - என்றார்.

தமிழ் கட்சிகளோடு பயணிப்பது தொடர்பில் அவர் பதிலளிக்கையில்-

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து பயணிக்கிறார்களா என்பது எனக்கு தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்தவரை எங்களுடைய மத்திய குழு மற்றும் அரசியல் குழுவில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்பாக சேர்ந்து செயல்படுதல், இணைந்து பயணிப்பது தொடர்பான விடயங்களை பற்றி பேசலாம்.

நாங்கள் யாரையும் வெளியில் விடவில்லை. இப்போதும் ஒற்றுமையாக பலமாக செயல்படுவதற்கான கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

தேர்தலுக்கு முன்னரும் பகிரங்கமாக கோரிக்கையை முன்வைத்தவர்கள் எங்களுடைய கட்சியினர் தான். பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுகின்றபோது எல்லா மேடைகளிலும் அதனை தெளிவாக கூறியிருக்கிறேன். எங்கள் கட்சியை பலப்படுத்துவதற்கும் கூட்டமைப்பை உருவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதற்கான ஆணையை தாருங்கள் என்று கேட்டிருந்தேன். அந்த ஆணையை மக்கள் தந்திருக்கிறார்கள். எனினும் தனி மனிதனாக நான் அதனை செய்ய முடியாது. மத்திய குழு மற்றும் அரசியல் குழுவின் கூட்டு முடிவின் பிரகாரம் அந்த ஒற்றுமைக்கான பாலத்தையும் பயணத்தையும் மேற்கொள்வோம் - என்றார்.

## விலகிச்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருந்தன. ஆனாலும் ஒரு விடயம் ஆராயப்பட்டது. தமிழரசுக் கட்சி தலைவரின் பதவி விலகல் கடிதம் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அந்த கடிதத்தை மாவை சேனாதிராசா அனுப்பியதன் பின்னர் பதவி விலகல் கடிதத்தை வாபஸ் பெறுவதாக சொல்லியிருந்தார். மீண்டும் தலைவராக இருப்பதற்கான சம்மதத்தை தெரிவித்து இருந்தார். அது தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அதன் அடிப்படையில் அவர் பதவி வகிக்கவேண்டும் என்ற ஒரு கருத்தும், கடிதம் கொடுத்தன் பிரகாரம் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருந்தது.

ஒரு ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் அந்த வாதப் பிரதிவாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத நிலையில் இரு தரப்பு கருத்துக்களும் இருந்தன. ஜனநாயக ரீதியாக இதனை பார்க்க வேண்டியிருந்தது. இதனால் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்திவைத்து மீண்டும் கூட்டம் ஒன்றை கூட்டி தலைவர் யார் என்று முடிவெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலில ஏற்பட்ட பின்னடைவு குறித்தும் ஆராயப்பட்டது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பின்னடைவு பற்றி பேசப்பட்டது. இதற்கு பதவி விலகல் ஒரு காரணம் என சொல்லப்பட்டாலும் இன்னும் பல காரணங்கள் இருந்தன. அதனைச் சுயாதீனமான, நடுநிலைமையான ஆய்வுக் குழு மூலம் ஆராய்ந்து அறிக்கைப்படுத்திய பின்னர் தான் கருத்து கூற முடியும். ஒவ்வொருவரது கருத்துகளும் சுயம் சார்ந்து இருக்கின்றன. ஆய்வுக் குழு மூலம் அதனை மேறகொண்டால் அது பயன் உள்ளதாக அமையும்.

தமிழரசுக் கட்சி தலைவர் விடயம் முக்கியம் பெற்று இருந்தமையால வேறு விடயங்கள் குறித்து பேச முடியாது போனது. இதற்கு விரைவில் முடிவு எடுத்துவிட்டு தமிழ் மக்களது பிரச்னைகள் குறித்து பேச வேண்யுள்ளது. கடந்த தேர்தலில் கட்சிகளில் இருந்து விலகித் தோதலில் போட்டியிட்டவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்ற ஒரு கருத்தும் பேசப்பட்டது. சிலரது கருத்து அவர்களை கட்சி அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கி விடவேண்டும் என்பது. இருந்தாலும் அந்த கருத்து ஏகமனதான கருத்தாக இருக்கவில்லை. அதிருப்தியின் காரணமாக வெளியேறிச் சென்றவர்களும் இருக்கிறார்கள். அந்த அதிருப்திகளுக்கு என்ன காரணம் என்றும் ஆராய வேண்டியுள்ளது. ஆய்வுக் குழுவின் மூலம் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின் முடிவு எடுக்கப்படும்.

அத்துடன், பாராளுமன்றக் குழுவில் என்னை பேச்சாளராக அறிவித்துள்ளார்கள். அதனால் எமது கட்சியின் கருத்தியல் பற்றி நான் சொல்ல வேண்டியுள்ளது. அதனை நான் செய்கின்றேன். கட்சி கூட்ட கருத்துக்களையும், பாராளுமன்ற கருத்துக்களையும் வெளியிடுவது என்னுடைய பணியாக இருக்கும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## சபாநாயகரின் கடிதத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 15

சபாநாயகர் அசோக ரன்வலவின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இது தொடர்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சபாநாயகர் அசோக ரன்வல தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்தார்.

தனது கல்வித் தகுதி தொடர்பில் சமூகத்தில் எழுந்துள்ள பிரச்னை காரணமாக தற்போது அந்தத் தகுதிகளுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆனால், தனது கல்வித் தகுதி தொடர்பாக எந்த பொய்யான தகவலையும் தெரிவிக்கவில்லை என அவர் தனது கடிதத்தில் தெரிவித்தார். (அ)

## ஈ.வி.கே.எஸ். காலமானார்



சென்னை, டிசெ. 15

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏயுமான ஈ.வி.கே.எஸ் இளங் கோவன் உடல்நலக்குறைவால் நேற்றுக் காலை காலமானார். அவருக்கு வயது 75. கடந்த சில நாட்களாக உடல் நலக் குறைவு காரணமாக தீவிர சிகிச்சை பெற்றுவந்த அவரது உயிர் நேற்று காலை 10.12 மணியளவில் பிரிந் தது என்று சிகிச்சை பெற்றுவந்த மருத்துவமனை தரப்பு தெரிவித்துள்ளது.

தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் என பல்வேறு பதவிகளை வகித்தவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன். ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியின் எம்.எல்.ஏயாக இருந்த அவரது மகன் திருமகன் உயிரிழந்த நிலையில் அத்தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. அதில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், அவர், காய்ச்சல் பாதிப்பு காரணமாக சென்னை, மணப்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த நவம்பர் 11ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். அவருக்கு நுரையீரல் சார்ந்த பாதிப்பு உறுதி செய்யப்பட்டு, அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அவரது உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டதாக நேற்று அதிகாலையில் இருந்தே தகவல்கள் வெளியாகின. தொடர்ந்து அவர் நேற்று காலை 10.12 மணிக்கு உயிரிழந்ததாக மருத்துவமனை தரப்பு உறுதி செய்துள்ளது. (அ)

## சீரற்ற காலநிலையினால் யாழில் 543 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 15

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 1755 குடும்பங்களை சேர்ந்த 543 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என் சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதுபோல சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இரு குடும்பத்தைச் 09பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள் இரண்டும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 135பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும், இரண்டு அடிப்படை கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன. இரண்டு பாதுகாப்பு நிலையங்களில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 123பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 54பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 336பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-5)

### இறக்குமதி செய்யப்பட்டதில்

# 75,000 கிலோ கிராம் அரிசி பாவனைக்கு தகுதியற்றது!

### சுகாதாரத்துறை கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 15

**நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி பிரச்னைக்கு தீர்வாக, அரசாங்கம் அரிசி இறக்குமதிக்கு அனுமதித்ததன் பின்னர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அரிசியில் 3 கொள்கலன்களில் இருந்த 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு தகுதியற்றது என சுகாதாரத் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.**

இதேவேளை, இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள 2,400 மெற்றிக் தொன் அரிசியில் 90 வீதமான அரிசிக்கு சுங்க வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி முதல் அரிசியை இறக்குமதி செய்ய தனியார் இறக்குமதியாளர்களுக்கு அரசு அனுமதி அளித்தது.

அதன்படி, நேற்று முன் தினம் நிலவரப்படி, தனியார் துறையினர் சுமார் 2,400 மெற்றிக் தொன் இறக்குமதி அரிசியை இலங்கைக்கு கொண்டு வந்து கொழும்பு துறைமுகத்தில் இறக்கியுள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதி வரை இலங்கைக்கான அரிசியை இறக்குமதி செய்ய அனுமதியுள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்புகளில் சுமார் 90 வீதம் சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அரிசியின் தரம் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பரிசோதிக்கப்படுகிறது.

இதன்படி, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பு அடங்கிய 03 கொள்கலன்களில் சுமார் 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு தகுதியற்றது என சோதனைகளில் தெரியவந்துள்ளது.

அந்த 03 கொள்கலன்களில், 02 கொள்கலன்களில் அரிசியில் புழுக்கள் இருந்தமை தெரியவந்துள்ளது.

மற்ற கொள்கலனில் உள்ள அரிசி மட்டைகளில் உற்பத்தி திகதி, காலாவதி திகதி மற்றும் உற்பத்தி நிறுவனத்தின் விவரங்கள் அடங்கிய பழைய லேபிளின் மேல் புதிய லேபிள் ஒட்டப்பட்டதால், அந்த கொள்கலனுக்கும் சுகாதாரத் துறை அனுமதி வழங்கவில்லை.

03 கொள்கலன்களில் பொருத்த மற்ற அரிசி இறக்குமதி செய்யும் நிறுவனத்திடம் மீள ஒப்படைக்கப்படும் அல்லது அழிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட முதலாவது 5,200 மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது. (அ)

# தையிட்டி விகாரைக்கு எதிராக தொடர்ந்து வரும் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 15

தையிட்டி பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் நேற்று சனிக்கிழமை மாலை வரை போராட்டம் இடம்பெற்றது.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவம் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து உரிய அனுமதிகள் எதுவுமின்றி கட்டிய திஸ்ஸ விகாரையை அகற்றி, காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவேண்டும் என வலியுறுத்தி கடந்த 18 மாத காலமாகத் தொடரும் இந்தப் போராட்டம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# 32 இலட்சத்து 10,000 ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 15

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 32 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் அபுதாபியிலிருந்து நேற்றைய தினம் அதிகாலை 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 21,400 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 107 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## போலி கல்வித் தகைமையுடன் ஏராளமானவர்கள் சபைக்குள்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 15

தற்போதைய நாடாளுமன்றத்தில் போலியான கல்வித் தகைமைகளை முன்வைத்து மோசடி செய்பவர்கள் ஏராளமாக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

கிடைத்துள்ள தகவல்களின்படி, ஆறு போலி வைத்தியர்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

படிப்பறிவில்லாதவர்கள் காணப்படும் பாராளுமன்றத்துக்கு பதிலாக படித்தவர்களை ஆட்சிக்கு கொண்டு வருவதாக கூறியே, இந்த அரசாங்கம் ஆட்சியமைத்தது.

பட்டியல் ஒன்றை வெளியிட்டு, இவர்கள் படித்தவர்கள், கடின உழைப்பாளிகள், முன்னர் இருந்தவர்கள் போல் அல்ல என கூறியிருந்தனர். தற்போது சபாநாயகருக்கு கலாநிதி பட்டம் இல்லை.

பொய்யிலேயே வாழ்பவர்கள் இவர்கள். இது போன்று அநேகமானவர்கள் உள்ளனர். ஆறு போலி வைத்தியர்கள் உள்ளனர் - என்றார். (அ)

## மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் சடலத்தை மறைத்த இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 15

மாத்தறை - வல்பிங்குருகெட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த நபரின் சடலத்தை மறைத்து வைத்திருந்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் அனுமதியற்ற மின்சார வேலியில் சிக்குண்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, மின்சார வேலியைப் பொருத்திய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தாம் பொருத்திய மின்சார வேலியில் தாக்கப்பட்டுக் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அந்த சடலத்தை யாரும் கண்டறியாத வகையில் மறைத்து வைக்க ஏற்பாடு செய்ததாகவும் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 58 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org